உ

கணபதிதுணை.

மருதவனபுராணம்.

(இரண்டாம் பாகம்.)

இது

கும்பகோணம்

சைவப்பிரகாச வித்தியாசாலைக்

கதிபதியாகிய பண்டித

தர்க்ககுடார தாலுதாரி

அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

திருவிடைமருதூர் ச. சாமிநாத தேசிகர், அம்மாபேட்டை கந்தசாமிச் செட்டியார், திருமாந்துறை சபாபதிப் பிள்ளை, திருப்பணிப்பேட்டை சி. சொக்கலிங்க பிள்ளை, கோவிந்தசாமிப் பிள்ளை, சுப்பிரமணியப் பிள்ளை ஆகிய இவர்கள் கேட்டுக்கொண்டபடி,

திருவிடைமருதூர்

குமாரபூஜை மஹோத்ஸவம் நடத்திவருகிறவரும்,

ஸ்ரீகிருஷ்ணசாமி காடேராவ் சாகேப் அவர்களின்

குமாரருமாகிய

சாமிராவ்காடே அவர்களால்

கும்பகோணம்

"லார்ட் ரிப்பன் அச்சாபீசில்"

பதிப்பிக்கப்பட்டது.

1893.

உ

சிவமயம்.

71464

காருண்ணியாமிர்தச்சருக்கம்.

நவையறு தவத்துச் சூதமாமுனிவ னனைமுகப் பங்கய நோக்கிச்
சவுனகர் மொழிவார் † சையமால் விலங்கறன்னி னின்றாங் கலைமுனிவர்
பவமறு பொன்னி கங்கைபொன் கூபம் பரவு காருண்ணியதீர்த்த
மிவைகளின் மூழ்கி யேனையதீர்த்த மெவற்றினு மாடினமென்றீர். (க)

இன்னுமத்தலத்தி லெந்துணைத் தீர்த்த மிலங்கிடு மவற்றிட மியாவை
யன்னவை யமைத்தோரியாவ ரங்கவற்றினாடி யின்புற்றவரியாவர்
பன்னுக வெனவே வணங்கலுஞ் சூதன்பகரு நல்லிடை மருதினுக்கு
முன்னுகத் தெல்லை நான்கியோசனை மேன்மூன்றிற்கு மொவ்வொன்று
குறைவே. (உ)

திகழுறு மிருமுப்பத்து முக்கோடி தீர்த்தமு முறையுமத் தலந்திற்
பகரு மன்னவற்றுட் சில வெடுத்துரைப்பாம் பரவுகாருண்ணிய வமிர்தம்
புகழுறு மவைகளெவற்றினு மேலாய்ப் பொலிவுறு மதிற்கதி ரிரவி
தகவொனுமிராசி பொருந்து முற்பகலிற் றனிப்பகல் படிவது விசேடம்()

மருமலர்த் தலையோன் றிருமகள் கொழுநன் வயங்குருத்திர னெனுமூவ
ருருவ மாமச்சு வத்தமத் தீர்த்தத் தோங்கு மீசானதிக் கிலங்கும்
பொருவிலன் னதையத்தீர்த்த முற்படிந்து புகழ்மதிவாரத்திற்காலே
வரு*தரிசத்திலேழ் வலம்புரியினுவல கெலாம் வலம் புரிபலனும். (ச)

பன்னுநான் மறையை விடுத்திடுபனவர் பரகதி யருளி லிங்கத்தைக்
கன்னியர்தமை விற்றவர் மதுவுண்டார் கருதிடு சிராத்தம் விட்டவர்கள்
பொன்முதற் களவுகொலை புரிந்திட்டோர் போற்றிடு குரவரை யிகழ்ந்தோர்
துன்னுமிக் கொடியோரியாரு மத்தீர்த்தந் தோய்ந்திடின் முத்த ராகுவரால்

அறைந்திடு பதினென்காய வித்தைகளு மகத்தினில விருறாஉ மின்னும்
புறந்திகழ் செல்வ முதலவா மைசுவரியமுங் குறித்திடிற் பொருந்து
மறந்தரு பகையும் பிணிகளுநீங்கு மாறிலா வரனுரு வெய்துஞ்
சிறந்தகாருணிய வமிர்தமா மதனிற் சென்றினி தாடினர் தமக்கே. (ரு)

---

† சகியம் என்பது-தென்மொழியில் சையம என்றாயிற்று.

*தரிசம்—அமாவாசை. இத்திதியில் சூரிய சந்திரர்கள் ஒருங்கு கூடிவரக் காணப் பெறுதலின், அதற் கிப்பெயர் போந்த வாறுகாண்க. [திருச்=காண், பார்.]

மங்கல முறுகா ருண்ணிய வமிர்த வாவியிற் படிந்திடி னொருகாற்
றுங்கமா மினிய தீர்த்தங்க ளனைத்துந் தோய்ந்திடு பேறுவந் தெய்து [ள்
மங்கதி னொருகாற் றருப்பணஞ் செயினோ ராண்டினிற் சார்பிதிர் தினங்க
பங்கமி றெண்ணூற் றுறிற்செய் சிரார்த்த பலன்கொடுபிதிர்களுண் மகி
ழ்வார். (௭)

அங்கதிற் படிந்து துயர்தொலைத் தின்ப மணைந்துளோர் தமிற்சில ரிசை
கங்கைநல் யமுனை தாமிர பன்னி காத்தியா யணிபுகழ் வாணி [ப்பாங்
துங்கபத் திரைகோ தாவிரி பவானி சோணையா தியநதி மின்னார்
திங்கள்சூழ் சிகரக் கைலையங் கிரியிற் சென்றெதி ரிறைவனைப் பணிந்து.

அங்கணு கைலை யிறைவவிவ் வுலகோ ராற்றிடு பவமெலாம் படிவுற்
றெங்கள்பால் விடுத்துச் சேறலா லியாங்க ளெழில்குலைந் துடலெலாங் க
றுத்தே, மிங்கெமை யனைய கொடியதீ வினைவிட் டேகுமா றருள்புரி
கென்றார், *சங்கர னெனுந்தன் பேரினுக் கிசையத் தற்பர னுளமகிழ்ந் தி
சைக்கும். (௯)

பொன்னியின் றென்சார் வளரிடை மருதிற் போற்றுகா ருண்ணிய வமி
ர்தந், தன்னிடை மேட மதிமுத லினிற் சாற்றுகற் கடகமெய் திடுங்காற்
றுன்னின ரொருகாற் றோய்ந்தெழுந் திடுமுன் றொல்வினைத் துடக்கெலா
மகலும், வன்னிமேற் படிந்த பஞ்சுபோற் கதிரோன் வருமுனந் தொலை
யிருட் கணம்போல். (௧௦)

நீயிரு மணைந்து படியினைத் தினத்தி னிங்கிடும் பவக்குல மனைத்துந்
தூயரா குவிரொன் றுரைத்தன னவர்க டொழுதுறு விடைகொடு மீண்டு
மாயிருட் குலங்க ளனைப்படர்ந் தனைய மாதலத் திலங்குமத் தீர்த்த
மேயினோர் படிந்தார் படியுமுற் படிந்த வினைக்குல மனைத்துமாய்ந் தனவே

இரும்பினுக் கிரத குளிகையின் றுடக்க மெய்திடப் பசும்பொனா மது
போற், பெரும்புன லதனிற் படிதலும் வினைபோய்ப் பேரொழி லடைந்தது
நோக்கி, யரும்புகழ்த் தீர்த்த மடந்தையர் மகிழ்வுற் றணியிடை மருதின்
வீற் றிருக்குஞ், சுரும்புறு கடுக்கை புனைபரஞ் சுடரைத் தொழுதுதோத்
திரம்பல விசைத்து. (௧௨)

அவரவ ரிருக்கு மிடங்களி னனைவுற் றன்றுதொட் டாண்டினுக் கொரு
கா, னவிலுறு மேட மதிமுதற் பகலி னண்ணியாண் டனையதீர்த் தத்தி
னுவகையி னோடும் படிந்தது காறு முற்றிடு கொடியதீ வினையுங்
கவலையு மகற்றி வருவரிவ் வாறு களிப்புறப் பயின்றிடுங் காலை (௧௩)

---

* சங்கரன்=சிவன். தன்னை வழிபட்ட ஆன்மாக்களுக்குச் சுகத்
தைச் செய்பவன். [சம்=சுகம், கரன்=செய்பவன்.]

வேறு.

வட்ட வார்கட லகழியும் வான்றொடு மதிலு
மட்டு லாமலர்ப் பொழிலுஞ்சூழ் மிதிலையில் வாழ்வோ
னட்ட மூர்த்திபா லன்பினோ னுலகினி தாள்வோ
னிட்ட ரோமனென் றிசைத்திடு மியற்பெய ருடையோன் (௧௪)

அரிய கேள்விய னுளனொரு காவல னவனுக்
குரிய காதலி பெயரினைச் சுகேசியென் றுரைப்பர்
தெரியு மன்னவள் வனப்பினிற் றிருவினிற் சிறந்தாள்
பரிவி னோங்குகற் பியரிலருந் ததியெனப் படுவாள். (௧௫)

அந்த மாதுட னீடுநா ளின்புறு மனையான்
மைந்த ரின்மையா னென்செய்வா மெனமனம் வருந்திச்
சந்த நான்மறை யறைந்திடு தானங்க ளநந்த
முந்தி யற்றினான் பற்பல தருமமு முயன்றான். (௧௬)

மதங்க னிந்திடு களிற்றவ னிங்ஙனம் வளர்நா
ளுதங்க னென்றொரு முனிவர னவனிடத் துற்றா
னிதங்க லந்திடு மொழியவ னெழுந்தவன் கமல
பதங்க ளிற்பணிந் தியான்செயும் பணியெனை யென்றான். (௧௭)

எண்ணு றும்பல தருமநீ யிழைந்தல் கேட்டுன்னைக்
கண்ணி நோக்கிட வந்தனங் காதலி னீண்டுப்
பண்ணு கின்றன மொருமக மதற்குநின் பாங்கர்
நண்ணு றும்பொருள் களிற்சில நல்குக வேண்டின். (௧௮)

அறத்தின் மேலனீ யாதலி னவற்றையா மேற்றுத்
திறத்தி னாற்றுமவ் வேள்வியிற் செலுத்துது மென்ன
மறத்தி னீங்கிய மாதவ னிசைத்தனன் மன்னன்
குறித்தி டும்பொரு ளலகில பரிவொடுங் கொடுத்து. (௧௯)

எளிய னென்றனை மகவிலாத் துயரமொன் றெய்தித்
தளர்வு செய்கின்ற தன்னது தனக்கொரு தளர்வீண்
டளிமி குந்திடு முனிவர விளைத்தியென் றறைந்தான்
களமி டற்றவன் றனைநினைந் தம்முனி கழறும். (௨௦)

அருணை வண்பதி திருவையா றணிகொள் மாயூர
மருள கற்றெழு முனித்தலம், வளரிடை மருதற்
றுருவ நீடுயர் புனல்படிந் துருத்திரற் கிலக்கந்
தருண வில்வமுந் *துரோணமும் பணிந்தெதிர் சாத்தில். (௨௧)

---

* துரோணம் = தும்பை, திரு-என்னும் முதனிலைக்குச் சொல்,

சேயு தித்திடு மவற்றினிற் றிருவிடை மருதி
னேயும் வல்லையி னித்திற யத்தலத் தியற்றி
மேய கண்ணனுந் தசரத வேந்தனு முன்னாட்
டேய மைந்தரைப் பயந்தனர் சோதிதன் னருளான். (உஉ)

அத்த லங்களி னீயுமுற் றுற்றி னிவ்வாறு
புத்தி ரற்பெறு குவையென முனிவரன் போந்தான்
முத்த மூரலொண் மனையொடு முனையடு மரசன்
சுத்த நீடுறு மருலைமுன் றுன்கினுஞ் சூழ்ந்து. (உங)

இனிய தீர்த்தங்கள் படிந்தரு ளீசனை யிறைஞ்சி
வினைய கற்றுறு சிவார்ச்சனை விதிப்படி யியற்றி
யனைய மாதலங் களிற்சில வைகனன் கமர்ந்து
தனைநி கர்த்திலங் கிடைமரு தெனும்பதி சார்ந்தான் (உச)

சார்ந்து காருணி யாமிரு தத்தடம் படிந்து
வாய்ந்த சிற்றிடை யுடைப்பெரு நலமுலை மணாளற்
சூழ்ந்தி றைஞ்சிநின் றருச்சனை துலங்கிடப் புரிவுற்
றேர்ந்துநல்லெழின் மனையொன்றி லிருந்தனன்மகிழ்ந்து. (உரு)

விருப்பி னோடங்குச் சிலபகல் மேவுமுன் மனைவி
கருப்ப மெய்தின ளனையதோர்ந் தகமிகக் களித்துப்
பொருப்பு வின்மரு தீசன்பான் மிகுமன்பு பூண்டான்
மருப்ப யின்றிடு கோதையும் மகவினைப் பயந்தாள். (உசு)

சருது மைந்தனைக் காதன்மீ தூர்ந்திடக் கண்டான்
பிருது கீர்த்தியென் றுருதனிப் பெயரினி தளித்தே
மருத நாயகற் களவில்பொன் வழங்கிநற் கதிரோன்
றருதி னம்பல சென்றபின் சார்ந்தனன் மிதிலை. (உஎ)

ஹிம்சி என்னும் அர்த்தமுண்மையால் அம்முதனிலையினின்றுந் தோன்றிய துரோணம் என்னும் இப்பதத்திற்கு, இதன் இலை உரக கீடவிஷம், சிலேஷ்ம சந்நி, வாதம், கபம், அக்கினிமந்தம், சிரநோய்களையும், இதன் புஷ்பம் தாகரோகம், சந்நிபாதஜுரம், நேத்திர ரோகங்களையும் நீக்குதலான், நோய்களை நீக்குவது என்பது பொருளாதல் அறிக. இன்னும், தும்பை தன் பூவை எடுத்துச் சிவபிரானைப் பூசித்த ஆன்மாக்களது பாபங்களை நீக்குதலின் அப்பெயருடைத்தாயிற் றெனவும் உணர்க. வில-என்னும் முதனிலைக்குப்பேதி, பிரி என்னும் அர்த்தமுண்மையான், அதினின்றுந் தோன்றிய வில்வம் என்னும் பதத்திற்குத் தன்னை யுண்டவர்களுடைய மேகம் குட்டம் முதலாகிய நோயை அவரினின்றும் பிரித்துவிடுவது என்றும், தன்னைப்பூசித்தவருடைய பாவத்தை அல்லது தன்பத்திரத்தை எடுத்துச் சிவபிரானைப் பூசித்தவருடைய பாபத்தை அவரினின்றும் பிரித்து விடுவது என்றும் பொருளாதல் போலவெண்க.

மிதிலை யுற்றினி திருக்குநாள் விளங்கிளம் பிறைபோற்
புதல்வ னோங்கியென் னிரண்டெனும் பருவமுன் பொருந்த
மதிய மைச்சனோ டொருதினஞ் சூழ்ந்துதன் மகற்குக்
கதுமெனச்செய வேண்டுநற் கடிமணமென்ன. (௨௮)

தேறு மந்திரத் தலைவனு முளத்தினிற் றேர்ந்து
கூறு வானிந்த வரசிளங் குமரனுக் கேற்ப
வேறு கண்டிலன் சுபாங்கியென் றொருகொடி மேவு
மாறில் வண்புகழ்க காசிமன் னவன்மகண் மன்னோ. (௨௯)

அனையள் கண்ணுறச் சுயம்வரம் வரித்திடு மாங்குன்
றனய னோடுநீ யுறினவன் றனியெழி னோக்கிப்
புனைவள் பூந்தொடை மகிழ்ந்தெனப் புகன்றன னிருப
னினைய தேசெய லென்றவ்வா றேகின னன்றே (௩௦)

காசி மன்னவ னிவன்வர வுணர்ந்தெதிர் காணு
வாச முற்றிட வசதியும் வரிசையு மளித்தான்
பேசி யுற்றதன் செயலவண் பெரிதிருந் திடுநாண்
மாசில் செங்கதி ரோறினன் மறியதன் மீது. (௩௧)

ஆய புண்ணிய தினத்தினிற் கங்கையி னாடிச்
சாயன் மன்னவன் சிலரொடுங் கரையிடைச் சார்ந்தான்
போயி றங்கினன் றனிமையிற் புரவலன் புதல்வன்
மேய நற்பொழு தேகின்ற தென்றுபின் விரைந்து. (௩௨)

முந்து மன்பொடு மூழ்கினன் மூழ்கலுங் கங்கை
பந்த பாசநீக் கிடைமரு தருட்புனல் படிவா
னந்தர் வாகினி யாய்விரைந் தவணொடுஞ் சென்று
ளந்த வாவியி லெழுந்தன னங்குமூழ் கினன்போல். (௩௩)

மிகவு நீடெழி லெய்திவண் கரையிடை மேவிச்
சகம ளந்திடு தவளமால் விடைமிசைத் தயங்கும்
பகவ னின்னருட் டிருவடி பணிந்தவற் [illegible]த்து
மகிழ்வு நீடியெதிர் நின்றனன் மன்னவர் வியப்ப (௩௪)

---

* பகவன்=சிவன். ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறிற்கும் பகம் என்னும் பெயருண்மையின், அவ்வாறினையும் உடையன் என்பது அப்பகவன் என்னும் பெயருக்கு அர்த்தமாதல் அறிக.

காம னேயிவ னெனச்சொல்வார் காமனு மென்னிற்
பூமன் வார்சிலை கொளுமஃ தின்மையாற் போதின்
மாமனே யெனக் கூறுவா ரவனெனின் மலர்க்கை
நேமி யுற்றிடு மென்பர்மற் றியாரென நினைவார் (௩௫)

இந்த நீர்மையிற் சிலருறச் சிலரரு கெய்தி
யெந்த வூருனக் கென்றன ரிலங்குமப் பதியின்
முந்து தித்ததூஉ மகன்றதூஉம் பகீரதி மூழ்கி
வந்துவாவியி னெழுந்ததூஉம் வகைப்படச்சொன்னான். (௩௬)

சென்னி யித்திற முணர்ந்துறு சிறுவனைக் கூவித்
தன்னி லுற்றிட விருத்தின னுங்கவன் றுதை
மன்னு கங்கையின் மூழ்கிய மகனெழுந் திலனென்
றின்னல் வாரியின் மூழ்கின னிரங்கிமெய் பதைத்து. (௩௭)

தேடு வான்விரைந் தநேகரை விடுதலுஞ் சென்று
நாடு மன்னவர் பாதலத் தளவுமுன் னாடி
வாடி வந்தன ரதுகண்டிம் மடுவிடை நானுங்
கூட வீழ்வனென் றெழுந்தனன் குறிக்கு மப்போது. (௩௮)

வேறு.

நீதுயர் தவிர்தி மன்னநின் புதல்வ னிலவுசீ ரிடைமரு திடத்து
மாதனித் தீர்த்த மாடுதற் கேகும் வளர்புகழ்க் கங்கைதன் னுடனே
பாதல நெறிக்கொண் டேகின னுங்குப் படர்ந்திடிற் காணலா மென்ன
மீதலத் திறையோ னருளினு லெவரும் வியப்புற வெழுந்ததோர் வாக்கு.

எழுதரு மொழிதன் செவிப்புகுந் திடலு மிருகரங் குவித்துள மகிழ்ந்து
செழு நகர்க் காசிப் புரவலன் றனக்குச் சென்றுவந் திடுதுமென் றுரைத்
துத், தழுவுறுசேனை யொடுஞ்சில பகலிற் *சயிலமா தியவெலாங் கடந்து
பொழில்புடை யோங்கு திருவிடை மருதிற் பொருந்தினன் புதல்வனை.
கண்டான். (௪0)

தன்னெதி ரணைந்து பணிந்திடு மகனைத் தடக்கையா லெடுத்துமார் பணை
த்து, வன்னியிற் படிந்த மெழுகினுள்ளுருகி மற்றவன் றனைப்பிரிந் ததனாற்
றுன்னிய துயரு மவனிடத் தன்புந் துலங்கிட வெளிப்படு கின்ற
தென்னநீணயனபங்கயங்களினின்றெழுந்திடுபுனலின்மூழ்குவித்தான். ()

வளவனுங் கணைந்து தேற்றிடத் தெளிந்து மகிழ்ந்துபின் மகனொடு மேகி
யளவில்சீ ருறுகா ருண்ணிய வமிர்த மணைந்துதோய்ந் தியற்றிநன்னியமங்
கிளர்வுறு மணிப்பொற் கோயிலு ளெய்திக் கீற்றிளம்பிறைநறுங்கண்ணி
யொளிர்சடை மருத நாயகன் பாத வுபயபங் கயம்பணிந் தெழுந்து. ()

---

*சைலம்=மலை. சிலையால் ஆயது. [சிலை=கல்.]

வேறு.

அன்றுனைப் பிரிந்த பின்று னம்புய மலர்த்தா டன்னை
யொன்றுசிற் றறிவு தன்ஞ லுன்னல ஞகி யாங்கு
நின்றவென் னிலைமை கண்டு நினைவுதந் தருளாற் கூவி
யின்றெதிர் காட்சி தந்த விடைமரு திறைவ போற்றி, (௪௩)

மருவிடை மலர்த்தண் கொன்றை மதிவளர் சடைய போற்றி
கருவிடைப் புகாம லென்னைக் காத்தருள் கடவுள் போற்றி
பொருவிடை யூர்தி போற்றி பூரண புராண போற்றி
திருவிடை மருதில் வாழுஞ் செய்யபொற் சோதி போற்றி. (௪௪)

என்னநின் றேத்துங் காலை யீசனு காச வாக்கான்
மின்னுவேன் மன்ன நம்பால் வேண்டுக வரங்க ளென்றான்
மன்னனின் பதத்தை யென்று மறந்திடா மனமு மன்புந்
துன்னுறத் தருக வென்றான் சோதியு மவர்க ளித்தான். (௪௫)

தகர்மதிப் பிறப்பி லீசன் றனக்கெழில் விழாவுஞ் செய்தாங்
ககமகிழ் மணிப்பூண் செம்பொ னளவில வுதவி செய்து
பகருட் டீர்த்தஞ் சூழப் படித்துறை யமைத்துப் பின்னர்
மகனொடு மகிழ்ச்சி கூரு மன்னவன் மிதிலை யுற்றான். (௪௬)

அங்கவன் வாரணாசி யடைந்தன னவன்றன் மைந்தன்
பொங்கெழி லினிது கண்ட புரவலன் புதல்வி யன்று
னிங்குவந் துற்ற பின்ன ரியானவன் றனக்கே யெய்வன்
கொங்கலர் தெரிய லென்னக் கூறின னிருந்தா ளன்றே. (௪௭)

உற்றிடத் தீர்த்த மெய்தி யோங்கெழி லடைந்து கன்னல்
விற்றனிக் காளை யென்ன விளங்கிடு மகனொ டோங்கு
கொற்றவன் வந்த செய்தி குலவுறு மொற்றர் கூறக்
கற்றவர் புகழுங் காசிக் காவல னுவகை யெய்தி. (௪௮)

கதுமெனப் புதல்விக் கோதி மற்றவள் களிப்பு நோக்கிப்
புதுமண வோலை தீட்டிப் பொலிவுறு மிதிலைக் கேவி
விதுமுக மருகன் றன்னை மேவுற வழைத்து நன்கு
மதுமலர்க் கோதை மின்னை மணம்புரிந் தளித்தா னன்றே. (௪௯)

இன்னுமித் திறமத் தீர்த்தந் திடைப்படிந் தெண்ணி லார்கண்
மன்னிய துயர நீக்கி மனத்தினிற் குறித்த வெல்லாந்
துன்னினர் பெரிதும் மீது சொல்லுதும் பாணதீர்த்த
மென்னவோர் தீர்த்த மாங்கே யிலங்கிடு மதன்றன் மேன்மை. (௫௰)

காருண்ணியா மிர்தச்சருக்கம் முற்றும்.

சிவமயம்.

பாணதீர்த்தச் சருக்கம்.

வாணி நாயகன் முதலினோர் வணங்கிடை மருதந்
தாணு வின்வட கீழ்த்திசைத் தங்குமோர் தீர்த்த
நீண லந்தரு விற்கிடை நிகழ்த்துமீ தொட்டிற்
பாண தீர்த்தமென் றதன்பெய ருலகெலாம் பரவும். (௧)

தெரிக்கு மப்பெரு வாவியின் றேவதை யிராமன்
விரிக்கு நீழலோ ரரசதன் றென்புடை மேவும்
பரிக்கு மன்னதைச் சூருரம் பிளந்தவேற் படையோன்
றரிக்கு மந்நடத் தருகினில் வசிட்டனுந் தவத்தோன். (௨)

தண்ட கத்தனி வனத்திடைச் சார்ந்தெழி லிராமன்
பண்டு சஞ்சரிப் பவனொரு பகலினுங் கடைந்தான்
கண்டி லன்புன லுறுகிய மஞ்செயக் கையின்
* வண்டு தன்னைமன் விடுத்தனன் மலர்ந்திடு †பூமேல். (௩)

அங்க ணீடொரு வாவியா யதனிடை நின்றும்
பொங்கு தண்புன லெழுந்தது பொருந்துமப் புனலின்
மங்க லம்பெறப் படிந்தன னியமங்கண் மற்றும்
பங்க மின்றிநன் கியற்றினன் பரிந்தனன் பின்னர். (௪)

அரசு நீழலுற் றிருந்தன னிருந்திடு மமையத்
துனைசெ யுங்கணை வடிவதா யநாதியா யொளிரும்
பரசி வன்றனைக் கண்டனன் படுகரின் வடபால்
விரைசெய் தண்மலர் மருவுற விளங்கொரு தருக்கீழ். (௫)

எழுந்து சென்றனன் பரியொடும் விரைவொடு மெதிரோ
விழுந்து மெய்யுறப் பணிந்தனன் விளம்புதன் கணைசெய்
யழுந்து நீர்கொடு மகிழ்வுட னாட்டினன் கிடைத்த
செழுந்தண் கூவிள மாதிகொண் டருச்சனை செய்தான். (௬)

மேற்றி சைத்திரு முகத்தினின் றித்திறம் விளைத்திட்
டேற்று வெல்கொடிப் பரமனே யிடைமரு திறைவ
தோற்றி யிங்கெனக் குணர்வுதந் தனையெனத் துலங்கப்
போற்றி செய்தனன் செய்துமே லின்னன புகலும் (௭)

---

* வண்டு=பாணம். † பூ=பூமி.

நீடு வாளியிற் செய்திடு நிமித்திரு ளிதனுக்
கீடு மன்னுறப் பாணதீர்த் தப்பெய ரியையுங்
கூடு மன்புட னிதனிடைக் குறுகியா டினர்க
ளாட கத்திரு நாட்டினி லமரரா யவிர்வார். (௮)

இடப மாமதிப் பூரணை யினிலிதின் மூழ்கிப்
படவ ராவணி யித்தனிப் பரமனைப் பணிந்தோர்
திடம தாயுறு மன்பினு லருச்சனை செய்தோர்
நடமி யைந்திடு சிவபத நண்ணியின் புறுவார். (௯)

என்று நீடிய வரங்கொடுத் தெழிலருட் புனலிற்
சென்று மூழ்கிமா மருதநன் னிழலிடைத் திகழுங்
குன்ற வில்லியைப் பணிந்தவ னருளுறீஇக் குலவு
மன்ற *லஞ்சரோ ருகபத மனநிறீஇ யகன்றான். (௧௦)

அனைய னுக்கிய பாணதீர்த் தந்தனி லாடி
யினிய பாறயிர் நெய்பசு வேதியர்க் கீந்தால்
வினைகள் யாவையு மகன்றிடும் விளங்கவங் கிருந்து
மனதி லஞ்செழுத் தெண்ணிடின் மருவுநீ டின்பம். (௧௧)

சாற்றி டன்னதிற் றிலங்கொடு தருப்பண மியற்றி
லாற்ற லுற்றிடு கயைதனி லாற்றுமப் பலனும்
போற்றி டன்னதா மத்தடம் பொருந்திய வேற்ற
மேற்ப ராசர தீர்த்தமான் மியமெடுத் திசைப்பாம். (௧௨)

பாணதீர்த்தச்சருக்க முற்றும்.

———):◡:*:◡:(———

உ

சிவமயம்

பராசரச் சருக்கம்.

வசையில் காருணி யாமிரு தத்தினோர் வடகீழ்த்
திசையி னோர்கணை வீழ்ந்திடு சேய்த்தினோர் தீர்த்த
மிசை வளர்ந்திடு பராசர தீர்த்தமென் றிலங்கும்
விசைகொள் வின்மதி மூழ்குதல் விசேடமா மதனில். (௧)

*சரோருகம்=தாமரை. [ஸரஸ்=தடாகம், ருக்=முளை, வளர்.] எனவே தடாகத்தில் முளைப்பது என்க.

வாயு தேவன்மற் றதற்குறு தேவதை மருங்கின்
மீயு யர்ந்துநின் றிலங்குமோர் வேம்பெனுந் தாரு
மேய தன்புடைக் கண்ணுவ முனிவரன் விளங்குங்
காயுஞ் சூற்படை வயிரவ னதைநிதங் காப்போன். (உ)

பொலியு மன்னதிற் படிந்தனர் பூசுரர் தமக்குத்
திலம ளித்திடிற் றானமாய்த் தீவினை யகலுங்
குலவு சில்பக லதன்புடை வசித்திடிற் கூரு
மேலிவு நீங்கிடும் புனிதமெய் திடுமன மிகவும். (௩)

அன்ன தாகிய தீர்த்தமா புரத்ததா யவிருந்
துன்ன திற்படிந் தநேகர்கள் பழவினை தொலைத்தோ
ருன்னு மற்றதைப் பராசர தீர்த்தமென் றுரைத்த
தென்ன காரணத் தாலெனி லஃதெடுத் திசைப்பாம். (௪)

மூச்ச கந்திரி புகழுறு பராசர முநிவன்
கச்ச கந்திக முளமுலைப் பனிமொழிக் கனிவாய்
மச்ச கந்தியைப் புணர்ந்ததின் வருந்தவ மகற்ற
நச்ச கந்தினம் விளைத்திட நாள்பல கழித்து. (௫)

ஓது மோர்பக லெதிர்ப்படு முரோமச முநிவன்
பாத பங்கயம் பணிந்தெழுந் தன்பொடு பகரு
மாத வத்தனி மேருவே மறையினு கரமே
சோதி தன்னருட் கினியனே யெனப்பல துதித்து. (௬)

பன்னு தெண்டிரைப் பரவைசூழ் பாருலகிதனுண்
மன்னு புல்லறி வுற்றிடு மனுளர்நெஞ் சென்னுந்
துன்னு மீனினங் களைக்கவர் தொடர்வலை யன்றோ
கன்னன் மென்மொழிப் பொன்னனார் கதிர்முக வலயம். (எ)

*ஊழி னிற்பெரு வலியுள யாவைமற் றொன்று
சூழி னும்மஃ ததற்குமுன் றோன்றிடு மன்றே
பேழை யேனெழின் மச்சகந் தியினிடத் தின்பம்
வீழ லுற்றன னதனைமுன் விலக்கில துள்ளம். (அ)

அன்ன தன்பினின் டதைக்குறித் தருவருப் பெய்தி
யின்ன லுற்றிடு கின்றதி யானுமத் துன்பந்
தன்னின் மூழ்கினேன் புகலுமிக் கொடுந்துயர் தவிர்தற்
கென்னை செய்குவ னென்றனன் றுரோமச னியம்பும். (௯)

*திருவள்ளுவர் குறள். ௩அ-ம் அதிகாரம்,-ஊழ்.
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

வேறு.

தேறுபொற் பணிகளுந் திகழு மாடையு
மாறிடப் பிரித்திடின் மாத வொன்றிடல்
கூறிடு மலப்புழுக் குரம்பை யேயலால்
வேறுறக் கண்டதென் விளம்பு காலையில். (க0)

தோலிது நரம்பிது சோரி நீரிது
கோலுறு தசையிது குடர்மற் றீதென
வேலுறச் சிலபக லெண்ணும் போதினின்
வேல்விழி மகளிர்பால் வேட்கை நீங்குமால். (கக)

திருவுறு மகளிர்பால் வேட்கை தீர்ந்திடின்
மருவிடும் வீடனூர் மருவு போதினும்
பரசிவத் திடைமனம் பற்றி நிற்பினு
மிருவினை சமனுறு மெனினு மெய்திடும். (கஉ)

நிலைபெறு பரத்திடை நிலவு நெஞ்சனை
யுலகினி லவர்செயும் வினைவந் தொன்றிடா
வலியுறு மந்திர மருந்து வல்லனை
நலிவுசெய் திடுங்கொலோ நண்ணுந் தீவிடம். (கங)

தூயவ நின்மனந் தொடர்ந்து நிற்றலிற்
றீயது நின்னையுஞ் சேர்ந்தி டாதினி
யாயினுஞ் சபலநீ யடைந்த தன்மையான்
மேயது போம்வழி விளம்பு வாமரோ. (கச)

இனிதரு ளிடைமரு தடைவுற் றெண்ணில் சீர்க்
கனகதீர்த் தத்தினிற் கலந்து மூழ்கியே
புனிதநீர் வேணியற் பணிந்து போற்றிடிற்
றுனிதவிர்ந் துன்மனஞ் சுத்தி யெய்திடும். (கரு)

என்றுநீ டருளொடு மினிதி யம்பினு
னன்றென விடைகொடு நவில்ப ராசரன்
சென்றுயர் முனிவரர் சிலவர் சூழுறத்
துன்றெழி லிடைமரு திடத்திற் றுன்னினான். (கசு)

கலந்துறு வளமெலாங் கண்ணி னேக்கினு
னலந்தரு பொன்னியி னண்ணி யாடினு
னிலங்கருள் வாவியு மெழில்கொள் பொன்னெனத்
துலங்குறு வாவியுந் தொடர்ந்து மூழ்கினான். (கஎ)

மருதிறை யவனடி வணங்கி யேத்தினான்
பெரிதுகந் தேகினான் பிறங்கு மத்தடத்
தருகினிற் சிலபக லமர்ந்தி ருந்துதன்
கருதுநன் மனத்துறு கலக்கந் தீர்ந்தனன். (௧அ)

வேறு.

கனகமா தீர்த்தந் தோய்ந்து கடுவினைதொலைத்தோம் வேளை
முனிபரற் பணிந்து மேலா மொழியவன் கருணை பெற்றோ
மினையசீர்த் தடத்தின் பாங்க ரிருந்தகத் தூய்மை யுற்றோ
மெனநினைந் ததனைப் பின்னு மெழில்பெறத் திருத்து வித்தான். (௧௯)

பகருமந் நிமித்தந் தன்னாற் பராசர தீர்த்த மென்னப்
புகழுறு மினிய நாமம் பொருந்திய தினிவெம் பாவத்
துகளறு சோம தீர்த்த மான்மியந் தொடங்கு கின்றோந்
திகழுறு முமையாள் பங்கன் சேவடிக் கன்பு மிக்கீர். (௨௦)

பாராசரச் சருக்க முற்றும்.

௨

சிவமயம்.

சோமதீர்த்தச் சருக்கம்.

இந்தி ரன்முதற் கடவுள ரிசைபெறு குரவன்
சந்தி ரன்றனை யடைந்தெதிர் தாழ்ந்தபின் றேத்தித்
தந்தி ரஞ்சில வுணர்நீ தருகெனக் கென்ன
முந்தி ரந்திட வினிதென மொழிந்திடு நாளில் (௧)

காரை யந்தரத் தலைத்திடு கருங்குழற் பசும்பொற்
றேரை யச்சுறுத் தல்குலா டிகழவன் மனைவி
தாரை யென்பவள் கன்னலந் *தனுத்தனு வில்லோன்
போரை யாற்றிட வலியிலான் மிகுமயல் பூண்டு (௨)

அனுதி னந்தரு பழக்கமு மிகுந்திடு மழகு
மினிது மேவுசந் திரனிடத் தியன்றனைக் கொடுநா

*தநு என்னும் பதங்களுள் முன்னது வில் எனவும், பின்னது சரீரம் எனவும், பாணங்களைப் போக்குதலினாலும் உணவு முதலியவற்றாற் பெருத்தலினாலும் வில்லிற்குஞ் சரீரத்திற்கும் அப்பெயர்கள் ஆயின எனவும் உணர்க. [தநு=எதிரில் வீசு அல்லது போடு. தநு=விஸ்தாரமாக்கு அல்லது பரப்பு]

மனைய மாரனை வேறுமென் றவன்றனை யழைப்பான்
றுனிகொ ளெஞ்சினுக் கிசைத்துமுன் விடுத்தன னேது. (௩)

மேவு மன்புறு தாதையே யாயினும் விளம்புந்
தாவில் காதல ராயினுஞ் சகோதர ரெனினும்
யாவ ராயினு மிளமையு மெழிலுமெய் தினரேற்
பாவை மார்மன மவரிடைப் படர்ந்திடு மன்றே. (௪)

விகுதி முன்னிடை நிலைமுத லவற்றொடு மேவப்
பகுதி யின்பொரு ளதனிடத் தவாவுறு பரிசிற்
றொகுதி யுற்றிடு பூண்முலை தொடர்ந்திட மயங்கி
மிகு திடத்துறு முளத்தசந் திரனுமே வினனே. (௫)

கலக வேல்விழி யவர்முகங் காணினு மவர்க
ளிலகு தீஞ்சொல்கேட் பினுமவர் தம்மையெண் ணிடினு
முலகி லாடவர் மனமுரு கிடுமெனி லுவரோ
வலிமை செய்திழுத் திடினெவர் மறுத்திட வல்லார். (௬)

முத்த மூரலின் மயற்கடன் மூழ்கிநீ டின்பந்
துய்த்த னன்னுளந் தேறினன் சூழ்ந்துபின் னவளை
யுய்த்த காதலிற் கொண்டுதன் னுலகினி லேகி
வைத்த னன்னினி திருந்தனன் மருவினன் மகிழ்ச்சி. (௭)

அன்ன தோர்ந்துட னெழுந்துசூ ழமரர்க ளோடு
பொன்னும் வெள்ளியுஞ் சதமகன் கொலுவினிற் போகி
மன்னு மித்திறம் புகன்றனர் மற்றவன் வெகுளூற்
றென்னை செய்தன னவன்றனை யழைமினென் றிசைத்து. (௮)

தேவர் கூவிட வெதிருறு திங்களை நோக்கி
யாவரும் பணிந் திடத்தகு குரவனுக் கிசைந்த
பாவை தன்னைநீ விரும்புதல் பான்மையோ விங்குன்
றாவ றன்னையு மவளையும் விடுகென வறைந்தான். (௯)

பற்று பாவமும் பகையொடு பழியுமக் களங்கன்
சற்று மோர்ந்திலன் செருக்கினுற் றழீஇயவெங் காமங்
குற்ற மேற்றிடு மதுவினுங் கொடியதை யன்றோ
மற்றெ னக்கவ ளனைவிட மனமிலை யென்றான். (௧௦)

அந்த வாசகங் கேட்டலு மமரர்க ளெவரு
மிந்தி ரன்றமக் கிசைத்திடு மேவலுஞ் சினமு
முந்து றப்படை கொடுசமர் செய்திட முன்னிச்
சந்தி ரன்றனை வளைந்தனர் பரிதிபோற் சார்ந்து. (௧௧)

நின்ற சந்திரன் றன்புடை நிகழ்பரி சனமுந்
துன்று மற்றுள படைகளுஞ் சூழ்ந்திடத் தானுங்
கன்றி முன்னுற வெதிர்த்தனன் கலந்திரு படையு
மொன்று வானவ வீரரு மெதிரெதி ருற்று. (கஉ)

தேரி லேறியும் விமானமேற் றிகழுற நின்றும்
வார்வி லம்புவாள் வேல்கதை மழுவெழுத் திகிரி
கூர்கொண் முத்தலைச் சூலமா தியபடை கொண்டு
போரி யற்றின ரார்ப்பொடு புணரியோ ரிரண்டின். (கங)

விண்ண திர்ந்தது திகாந்தமு மதிர்ந்தது விளங்கு
மண்ண திர்ந்தது பாதல மதிர்ந்தது மற்றும்
நண்ணு மித்திற மதிர்ந்திடு வேலையி னதிரு
டண்ண லுந்திரு மாலுநான் முகனுமாங் கணைந்தார். (கச)

அரனரு ளேவ றன்னு லரவிந்த னருகி னெய்தி
யிருவர்தம் போரு மாற்றி யிந்துவைச் சினத்தி னோக்கி
வருதிவெண் மதியை நீயோர் மதியிலா திசனைச் செய்தாய்
குருவினில் லவண்மேற் காதல் கொள்வரோ வறிஞ ரன்றே. ()

அவடனை யினிமேலேனும் விடுதியென் றறைந்தா னல்லோன்
சவலமீ தார வந்தத் தாரைதன் காத லாலே
பவமொடு பழியும் வந்து பலித்தன பலித்த போலுங்
கவலையென்னினியோர்போதுங்கைவிடேனவளையென்றான். ()

அந்தணன் பின்னுந் தக்க னாற்றிய வேள்வி தன்னின்
முந்துநீ பட்ட பாடு முழுவது மறந்தாய் கொல்லோ
வந்தது நாமிங் குன்பால் வள்ளலே வலிநு லன்றோ
தந்திடா யெனிலன் னாளைச் சபிக்குது முன்னை யென்றான். ()

அயனிது கூறவஞ்சி விடுத்தன னவளை யல்லோன்
வயினுறு கருவினோடு நாணொடு மயங்கு மன்னாள்
பயிலுறு *குருவின் முன்போய் நின்றனள் பார்த்திட் டன்னா
னியல்பிதோ மாதர்க்கென்னக் கொடுமொழி பலவு மீந்தான். ()

வெருளலும் பயந்து நாணி விதிர்ப்புற வொதுங்கி நின்றாள்
மகவினை யுயிர்த்தாண் மற்றம் மகவினை மகிழ்வி னோடுந்
திகழுறு கலையி னானென் சிறுவனென் றெடுக்க வந்தான்
றகவுறு குருவு மென்றன் றநயனென் றுரைத்துச் சார்ந்தான். ()

---

*குரு=சுராசாரியன். [கிரு=சப்தி, பேசு.] எனவே, தேவர்கட்கு ஞான த்தை உபதேசிப்பவன் என்பது பொருளாதல் அறிக.

இருவரு மதியி லாராய்ச் சமரினுக் கெழுந்திட் டார்க
ளருமறைக கொடியி னான்மற் றன்னதை மறித்துத் தாளை
திருமுக நோக்கி யிந்தச் சேயினை யெவர்பாற் பெற்றாய்
வெருளுறே லுரைத்தி டென்றா னுரைத்திலள் வெள்கி யொன்றும்.

மைந்தனங் கதனை யோர்ந்து தாயுறு வதனை நோக்கிச்
சிந்தையிற் கபட மென்னே செப்புதி யுள்ள தென்றா
னந்தண னவனைச் செங்கை யமர்த்தி யன்னாளை நோக்கித்
தந்தையா ரிவனுக் குண்மை சாற்றுதி வெள்க லென்றான். (உக)

விதுவென நாணி னோடு மெல்லென விளம்ப லுற்றாள்
கதுமென மகிழ்ச்சி யோடு கலைமதி யோடி யந்த
மதலையைக் யெடுத்து வந்து மடிமிசை யிருத்தி யன்னா
ளிதமுறு மறிவை யோர்ந்து புதனென நாம மீந்தான். (உஉ)

அன்னதை யுணர்ந்த தேவ ரனைவரு மதியை யாசான்
பன்னியைப் புணர்ந்த பாவி யென்றுமுன் பழித்திட் டார்கள்
பொன்னவ னெழுந்து சீறிப் பொருந்திடென் னழகு மங்கி
யின்னலுங் கயமு மெய்தித் திரிதியென் றீந்தான் சாபம். (உங)

சொற்றிடு முன்ன ரந்தத் தூயவன் சாபம் வந்து
பற்றிய தஃதி னோடு பாவமு மருவித் திங்க
ளுற்றுளம் பதைத்துச் செவ்வா யுலர்ந்து தன்மேனி நீடு
பொற்பழி திறத்தி னோடு கயமுமேற் பொருந்தி மாழ்கி. (உச)

வேறு.

மெய்த்த வத்துரு வாசனோ டிவையெலாம் விளம்பி
யித்தகைப் பெருந் துயரினுக் கென்செய்கே னென்றா
னத்தவத்தினா னிவைகள்வெங் கொடுவினை யாகு
மூய்த்தி டின்னவை தமக்குமீண் டொருமருந் துளது. (உரு)

அந்த மில்புக ழிடைமரு தடைந்துபொற் றீர்த்த
மூந்து றப்படிந் தவனுறை முதலவன் றன்னை
வந்த னஞ்செயி னல்லதை மருவுமித் துன்ப
மெந்த வாறெவ னியற்றினு மேகிடா தென்றான். (உசா)

நன்றெ னப் பகர்ந் தவனுமத் தலத்தினை நண்ணித்
துன்று மன்புட னனையதீர்த் தந்தனிற் றோய்ந்து
மன்ற லொன்றுகொன் றைச்சடை வரதனைப் பணிந்தான்
கன்று வெவ்வினை யகன்றது கதிரின்முன் னிருள்போல். (உஎ)

பண்ணி னிடுபற் பலதுதி பகர்ந்தனன் பரமன்
விண்ணின் மால்விடை மீதுமை தன்னுடன் வெளிநின்
றெண்ணி லாவர மகிழ்வுற வருளொடு மீந்தான்
வண்ண வெண்மதி யரனடி வணங்கிநின் றேத்தி. (உஅ)

*ஈசன் மேனியெண் வகையுளொன் றாய்விளங் கெழிலுந்
தேசு மிக்கவன் விழியினொன் றாகிய சிறப்பும்
வாச நீடவன் வேணியில் வயங்கிடு வாழ்வும்
பேசு வண்கலை தேய்தலும் வளர்தலும் பெற்று. (உகூ)

மருத வாணனைப் பின்னருஞ் சிலபகல் வணங்கக்
கருதி யத்தலத் திருந்தன னிருந்திடுங் காலை
பொருவில் சீரருள் வாவியின் பூருவ திசையி
லொருச ரம்படு சேய்மையி லொருதடஞ் சமைத்தான். (௩0)

சோம னாக்கிய திறத்தினாற் றுலங்குமவ் வாவி
சோம தீர்த்தமென் றடம்பதைச் சூழ்ந்துறுந் தெய்வஞ்
சோமன் காவறன் னீசனுங் கவுதமன் றுறவோன்
சோம வாரமாந் தினத்ததிற் றோய்ந்திடல் விசேடம். (௩க)

தூய வப்பெரும் புனலிடை யன்புடன் றோய்ந்து
சாயல் வாணுதற் கன்னிகை தன்னுட னினிய
பாய சங்கனி வகையிவை பனவர்கட் குதவிற்
றீய பஞ்சபா தகமுத லியாவை யுந்தீரும். (௩உ)

அருத்தி தன்னுட னத்தடந் தனிலணைந் தாடி
விரித்த தானமீந் திவ்வணம் வெவ்வினை தொலைத்துக்
கருத்த னீடரு ளெய்தினர் கணக்கில ரின்னுந்
திருத்த வன்புரி தீர்த்தமொன் றுளததூஉந் தெரிப்பாம். (௩௩)

காக மின்புறு வாவியி னிருதியிற் கலையொன்
றேகி வீழ்ந்திடு சேய்மையி னினிதொரு தீர்த்த
மாக விண்கொடு சந்திரன் பெயரினால் வயங்கு
மாகு மங்கதின் முநிதுரு வாசனு மறவோன். (௩௪)

---

*ஈசன் மேனி எட்டு பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்பனவாம். இதனை, "ஐம்பெரும் பூத மிருசுடரான்மாவன் றிவேறுலகில யவைதா, மூன்பெரு வடிவ மெனப்படுமென்றே யோர்ந்து ளோர்க் கிங்கிது தன்றே, லெம்பிரானீயே நிறையதிட்டாதா வென்பதற் கையமு முளதோ, வம்பரா மூர்க்கப் பேய்கடா மயக்கான் மாறுபாடுறப் பிதற்றுவரோ." என்னுஞ் சிவதத்துவ விவேகச் செய்யுளான் உணர்க.

திங்கள் காவலன் விருக்கமேர்ச் செழுந்துணர் வகுளஞ்
சங்க ரன்றனித் தேவதை சார்ந்ததிற் படிவுற்
றங்கு நெய்தில நெய்திடு கலையெழி லரிசி
கொங்கு லாமலர் சந்திவை யன்பொடு கொடுக்கின். (௩௫)

பூசை மிச்சில்பின் குலத்தினோர் புசித்திடு சேட
மாசை பூட்டிடு மடந்தைய ரயின்றிடு சேடம்
பேசு மின்னவை யருந்திய பெரும்பவ மகலுந்
தேசி கந்தரும் வன்மையுஞ் செல்வமும் பெருகும் (௩௬)

கறையு லாம்பனி மதியினர்ப் பலபகல் கடந்தோர்
மறமி யற்றியன் னதன்பெரு வலியினாற் கலைகள்
குறைவ தேயலா லிறைவுருக் குலைத்திணை நோக்கி
யுறுமி தற்கினி யென்செயற் றிடுவதென் றுன்னி. (௩௭)

தருண பானுவின் மாதரார் தரித்திடு குழைக
ளிருண் மறைத்திடு மெழிலிடை மருதடைந் திறைவி
கருணை வாவியிற் படிந்துசென் றன்பொடு கவின்செய்
வருண மால்விடை மருதநா யகனடி வணங்கா. (௩௮)

இலகு பற்பல துதிகள்செய் தேகிமுன் னுரைசெய்
யலைத ரும்புனற் றடஞ்சனைந் தனியுறு கலைகள்
மலைகு னித்தவ னருளினல் வளர்தல்கண் டேகந்தான்
கலையி லென்னிலென் னிருக்கினுங் கவின்மரு விடுமோ. (௩௯)

பண்டு வந்துவெம் பாதக மகற்றிய பரிசுட்
கொண்டு வந்துபின் னருமுறு குறையதூஉ மகற்றி
விண்ட லத்துறு தன்பதி மேவின னன்றி
மண்டு மாலுழந் தயருமோ மருந்துனை கண்டோன். (௪௦)

மருத் துலங்கிய கடுக்கையோ னடித்துணை வனசம்
விரித் திலங்கிடு தடாகமாங் கருத்தினீர் விதுவின்
றிருத் தகுந்தட மிரண்டுறு சிறப்புமிங் கிசைத்தா
முருத் திரப்பெருந் தீர்த்தமான் மியமினி யுரைப்பாம். (௪௧)

சோமதீர்த்தச்சருக்க முற்றும்.

சிவமயம்

உருத்திரதீர்த்தச் சருக்கம்

வன்ப ணிக்குலம் பூண்டிடு மருதவா ணனுக்குத்
தென்பு றத்திலெய் தவன்விழித் திருவருட் டீர்த்த
மின்ப மீந்திடு முருத்திர தீர்த்தமென் றிலங்கும்
பின்பு ரைத்துமப் பெயரதற் கெய்திய பெருமை. (க)

கருட னன்னதைக் காத்திடு மீசனே கடவு
ளிருடி பிப்பிலன் றமாலமாங் கிலங்கிடு விருக்க
மொருதி னம்படிந் ததனிற்றேன் கம்பல முதவிற்
றிருகு வெம்பவந் தோடுதீப் பிணிகளுந் தீரும். (உ)

முன்னை நாளிடை நிமியென மொழிந்திடுந் திகிரி
ம[illegible] வன் புரி தவத்தினால் வருதிட்ட கேது
[illegible]ன்றுங் காவலன் மகவின்றித் தருமமிக் கியற்றிப்
[illegible]னெ டும்பகல் கடந்தொரு புதல்வனைப் பெற்றான். (௩)

மண்ட லம்பெரு மகிழ்வுற வந்திடப் புதல்வ
னண்டர் நாயக னடியர்பா லன்புட னளித்த
வண்டனிப் பொருட் பயனென வளர்தரு நாளிற்
கண்ட மாலையென் றுரைக்குநோய் கண்டது களத்தில். (௪)

களம திற்பிணி யுறமக[illegible] வருந்துதல் காணா
வளவ னேருறு மருந்தொடு மந்திரச் செய்கை
யளவி லாவகை யாற்றலு மவற்றினீங் கிலதென்
றுளம திற்றுயர் கொண்டவ னுற்றன னன்றே. (௫)

காத்தி[illegible]யன முனிவனக் காலையங் குற்றான்
பாத்தி[illegible]சம னார்க்கியங் கொடுத்தனன் பணிவுற்
றார்த்தி யாதுளத் திடையென வவனுளா துரைத்தான்
மாத்தி யானமுற் றான்றனை மாதவ னிசைக்கும். (௬)

மன்ன நின்மகன் பூருவந் தனிலொரு வணிக
னன்ன வன்மனைப் புறத்தா லயமொன்று
துன்னு மங்கதிற் சிதைவுறு சிலைகளைத் தொகுத்துப்
பொன்ன தாம்படி விலைசெய்யாக் கவர்ந்தனன் போலாம். (எ)

பிரச மென்மல ரணிசடைப் பிரான்றனை யொருகாற்
றரிச னஞ்செயா வவனடி தலைக்கொளு மதனா

ல்ரச ஞயிஞ ஞலயச் சிலேவிலே செயாவுன்
டேரிசி ஞலஞன் களத்திளைச் சூழ்ந்ததிக் கொடிநோய். (அ)

வேறு.

கறைமிடற்றோன் பொருள்களினெள் ளளவுகொண்டோர் கடும்பிணியுற் றலேந்ததன்பி னிரயந்தன்னி, லுறைதவர்செங் கதிர்மதிய முள்ளகால முடனுணர்ந்து கவர்தலுறி னடுங்கியுள்ளம், பெறுபொருளி ன்றற்குணீத முதவியேழை பிழைபொறுத்தி யெனப்பணியி லனையபாவ, மிறுதியுறு முணர்கிலராய்க் கவர்தல்செய்யி னிருநுணிதங் கொடுத்திறைஞ்சி னேகு மன்றே. (க)

மறையுணர்ந்தோர் குரவர்பொருள் கவரிஞேர்ந்து மற்றதனுக் கிரட்டி கொடுத் திறைஞ்சல்வேண்டு, மறிவிலராய்க்கவர்ந்திடினும்பிறர்பொருளேக் கொளினு மத்திறமீந் திடவேண்டு மல்லல்வேண்டா, ருறுமிவர்கட் கோ துபணி செய்தகன்னு முற்றபரி வர்த்தனைசெய் யிடத்துந்நக்க, முறை மையிற் கொண்டிடலாகு மின்ஞேர்தத்த முன்னமுகந் தளித்தனரோற் கோடலாகும். (க0)

எப்பவமு மெப்பிணியுந் தீருந்தெய்வ விடைமருதி னுருத்திரதீர்த் தத்து மூழ்கி, னிப்பொழுதே நின்மகற்கொன் டேருகென்ன விசைத்திட்டா னிசைத்திடலு மவனுமவ்வா, றப்பொழுதே சென்றந்தப் பதியினெய்தி யத்தீர்த்தந் தனின்மகனை யாட்டுவித்தான், செப்புவதென் னவன்மிடற்றுப் பிணியத்தீர்த்தஞ் சென்றுதோய்ந் திடுமுன்னர்த் தீர்ந்ததன்றே. (கக)

வேறு.

பணங்கிள ரரவினீங்கும் பனிமதி யென்னவன்றே
னணங்ககன் றின்பமுற்று னேந்தறிந் தவனுமூழ்கி
மணங்குல விதழிசூடு மருதநா யகனைவந்து
வணங்கினன் றுதிகள்கூறி மகனொடு மகிழ்ச்சி யுற்றே. (கஉ)

இன்னலெய் திடிற்றம் மைந்தர் தாமுமவ் வின்னலெய்திப்
பின்னது தீருமாறு பேணலு மதனைத் தீர்த்து
மன்னவர் மகிழத் தாமு மகிழ்தலு மியல்பாந் தந்தை
யன்னையர் தமக்கு மைந்தர் புறத்துல வாவி யன்றே. (கங)

மகிழ்விற்றன் னுலகிற் பாதி மருதவா ணனுக்கு நல்கித்
தகைமுடி சூட்டி மைந்தன் றனையவ னகருக் கேவிப்
புகழுமத் தலத்திற் பன்னாட் பொருந்தவீற் றிருந்து பின்னர்ப்
பகலொழின் மதியஞ்சூடும் பரனடி நீழல் சேர்ந்தான். (கச)

உருத்திரதீர்த்தச்சருக்க முற்றும்.

உ

சிவமயம்.

பதுமதீர்த்தச் சருக்கம்.

மருவு பின்னிசைத் திமெதி வாவியின் றென்பா
லருகி னிற்பது மதீர்த்தமென் றொன்றுள ததற்குப்
பரமன் றேவதை போற்றுதல் பணிமுகக் கணங்கள்
பிரமன் மாமுநி விருக்கமோர் பிறங்கெழில் வில்வம். (க)

ஒல்லு மன்னதிற் படிந்துகார்ப் பாசமொப் பில்லா
வெல்ல முப்புயர் தானியம் விப்பிரர்க் குதவி
னல்ல னீங்கிடு மவர்க்குறு பகைவர்க ளழிவர்
மல்ல லெய்திடு திருவரும் வளர்தரும் வாணாள். (உ)

மாவ லித்தனிப் பெயருறு விரோசனன் மைந்தன்
மேவு மத்தடம் படிந்துமுன் வெம்பவ மகற்றிச்
சேவு றுங்கொடிச் சேவகன் றிருவரு ளடைந்து
தூவி னூர்த்தொலைத் தாண்டனன் சுவர்க்கமும் புவியும். (ங)

மருக் குலாவுமப் பதுமநீள் வாவிநீர் வடிவா
யிருக்கி னுந்தனிற் படிந்துளோ ரியற்றுவெம் பாவத்
திருக்கெ னும்விற கினுக்கொரு தீயதா மதனிற்
றெரிக்கு மெண்ணிலர் வினைகளைப் பசுமமாச் செய்தோர். (ச)

ஆண்ட நாதியாய் விளக்குமுற் றமர்ந்திடு பதுமத்
தேண்ட ரும்புகழ்க் கதைசிறி திசைத்தன மினிது
பாண்டு மன்னவன் புதல்வர்கள் பரனடி பணிந்து
காண்ட ருந்தடஞ் சமைந்திடு காதைமேற் கரைவாம். (ரு)

பதுமதீர்த்தச் சருக்க முற்றும்.

உ

சிவமயம்.

பாண்டவதீர்த்தச்சருக்கம்.

*இருமனப்பெண் டிருமதி மயக்கிடுதண் ணருவதுவு மிழைகுஞ் சூதுந்
திருமகணீக் கிடப்பட்டார் தொடர்பென்முன் றோர்கூறறெளிந்தமுழாற்
றருமனுயர் வீமனருச் சுனனகுலன் சகதேவன் சாற்றுமின்னோர்
பொருதலரோ டுறுசூதிற் புவியிழந்து காந்தனையக் காலைதன்னின். (க)

*திருக்குறள், கஉ-ம் அதி இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

கண்ணனிடை மருதடைந்து கண்ணுதலைத் தொழுமினெனக் கழறக் கேளா, வண்ணமுறு மனையதலத் தடைந்துமையாள் கருணையெழு வாவி மூழ்கித், தண்ணிலவா றணிசடிலத் தனிமருத வாணனடி தாழ்ந்து போற்ற, யெண்ணருமெந் துயர்தீர்ப்ப தென்றெனநின் றிசைத்தனராவ் வேலை தன்னில். (௨)

இன்னவினை விடுத்திடுமி னினியின்னுஞ் சிலபகல்பின் னிடனீர் சென்று, துன்னலர்க டமைத்தருமச் சமரதனிற் பொருகளத்திற் றொலைத்துப் பன்னூண், மன்னுபுவித் தலம்புரந்து பின்னுயர்நம் பதத்தினிது மருவுவீர்க ளென்னமரு திறைவனருள் வாக்கிலகு மிருவிசும்பி னெழுந்ததன்றே. ()

அந்தமொழி செவிப்புகலு மைவர்களு மகிழ்ந்துபினு மன்பினோத்திச், சந்தமுறு மனையபதி யிடத்தினிற்றம் பெயரினெவ்வோர் தடங்கள் செய்து, முந்துறுதந் நாடணைந்து பகைவர் பெருங் குலமுழுது முருக்கியைய, நந்தலில்பே ருவகையொடும் புரந்ததன்பி னண்ணலபுத நண்ணினூர்கள்.

பதுமமெனுந் தீர்த்தமதன் றென்புறத்தி லவர்தீர்த்தம் பரத்துவாசர்
முதுதவத்துச் சதுகர்ணர் கௌதமர்பாண் டவிபயிலர் முனிவர்நாவ
விதமுறுமா வாமலக மால்வேப்பு தருதெய்வ மீசனந்தி
கதமுறுவேற் குகன்பிருங்கி சண்டேச ரின்னவரோ காப்பிரேரும். (௫)

மேதகுமத் தடங்களிடைப் படிந்துபுனற் குடங்கவிகை விசிறியாடை பாதுகையந் தணர்க்குதவி லெண்வகைச்செல் வமுமுளவாம் பகைமை தீரு, மேகமுறு பிணிதவிரு மிங்ஙனமத் தடமூழ்கி யின்பமுற்றோர் பூதலத்தி லெண்ணிலர்மே லிந்திரதீர்த் தச்சிறப்புப் புகறல்செய்வாம். (௬)

பாண்டவதீர்த்தச் சருக்கமுற்றும்.

உ

சிவமயம

இந்திரதீர்த்தச்சருக்கம்

கொந்து றும்மலர்ச் சடையவன் குணதிசை யிடத்தி
லிந்தி ரன்முனஞ் சமைத்திடு தீர்த்தமொன் றிலங்கு
மந்த மன்னனே தேவதை யாமவன் முனிவன்
இந்து சூடிறை காப்பவன் றுருமுள் ளிலவு. (௧)

ஓது மற்றதிற் படிந்திரும் புட்டுனிர் வெள்ளி
மேதி யின்சுவைப் பால்கனி வெள்ளிலை கமுகம்
வேதி யர்க்கினி தளித்திடின் வெவ்வினை யதறே
டேதஞ் செய்பிணி யகன்றிடு மின்பமே லெய்தும். (௨)

ஆற்று மக்களிட் டோமத்தி னரும்பல னடையு
மேற்றி கழ்ந்திடு மதிற்படிந் தல்லனோய் விடுத்துச்
சாற்றி டின்பமு மகிமையுஞ் சார்ந்தன ரநேகர்
தோற்ற வாமுத லியதவிர் தூயமா தவத்தீர். (௩)

என்று சூதமா முனிவர னிசைத்தலு முனிவர்
வென்றி வச்சிரத் தவனெது வேண்டியத் தலத்திற்
சென்று ரைத்திடு தீர்த்தமாங் கியற்றினன் றெரிய
வின்றெ மக்குரை செய்திடு மெனவவ னிசைக்கும். (௪)

பூச லிற்பொரு களத்திடைத் தனதுயிர் பொன்று
தீச னரிடத் தறுவா மேற்றிடு திறலோன்
பேசு மன்னவன் வலனெனும் பெயரினு னெதிர்த்து
வாச வன்றனோ டமர்செய மற்றவன் றோற்று. (௫)

இவனை வஞ்சகத் தலைந்திட வேண்டுமென் றெண்ணி
யவனை யுற்றுநீ பொருதிடு மாற்றல்கண் டமரி
லுவகை யுற்றனா மிதவர முனக்களித் திடுவோங்
குவவு மால்வரை நேரினும் வேண்டுவ கோடி. (௬)

என்ன வோதலு மவனதைத் தெனக்கெதிர் தோற்ற
வுன்னி டத்தினிற் பெறுவதோ வுளக்கியான் றருவன்
மன்ன கேளென நாடொரு மகமியற் றிடுகே
னன்ன தற்குறு பசுவுமாய் வருகென வறைந்தான். (௭)

ஈவ தேபெரி தெனவல னெண்ணிநற் பசுவாய்த்
தாவி லாதவம் மகப்புரி சாலையந் தடைந்தான்
மேவி யிந்திரன் சுருதிசொல் விதிமுறை வதைத்துத்
தேவர் தங்களுக் கூட்டிமேற் செய்தனன் வேள்வி. (௮)

வஞ்ச னைத்திறத் தவன்றனை வதைத்திடு பவமும்
வெஞ்சி னப்படைப் பகன்றனை வீட்டிய பவமும்
நஞ்செ னக்கொதித் தலைத்திட நாடொறு மலைவுற்
றஞ்சி யித்துயர்க் கென்னிழைத் திடுவதென் றாய்ந்து. (௯)

மன்னு சீரிடை மருதடைந் துமையருள் வாவி
தன்னின் மூழ்கிநீண் மருதநன் னிழலுறை தாணு
பொன்ன டித்துணை பணிந்துதன் பெயர்கொடு புகலத்
துன்னு சீர்த்தட மமைத்தரு வினைகளைத் துடைத்தான். (௧௦)

அனைய சோதியை யருச்சனை புரிந்தவ னருளு
மனைய மால்வரங் களுங்கொடு பொன்னுல கடைவா

னினைய வாவியிற் படிந்திவை வேதியர்க் கீவோ
ரினைய னீக்கிமற் றிவைபெறு கெனவிசைத் தகன்றான். (கக)

கந்த நாண்மலர் மலிதரு கற்பக நிழல்வா
ழிந்தி ரன்றனித் தீர்த்தமான் மியஞ்சிறி திசைத்தாம்
வெந்த முற்பெருங் கடவுடன் பெயர்கொடு விளங்குஞ்
சந்த முற்றிடு வாவியின் பெருமைசாற் றிடுவாம். (கஉ)

இந்திரதீர்த்தச்சருக்கமுற்றும்.

உ

சிவமயம்.

அக்கினிதீர்த்தச்சருக்கம்.

சாலு மிந்திர வாவியின் சார்ந்திடு தென்பாற்
கோலி ரண்டெ னென்றுயிழ் சேப்மையிற் குலவுஞ்
சூல காதமொன் றுருதடந் தோன்றிடு மதன்றன்
பால னக்கினி சங்கரன் பகர்ந்திடு தெய்வம். (க)

மயன்மு தற்பகை மாற்றிடு மாதவன் கபிலன்
பயிலு றுந்தரு நெல்லியத் தடத்தினிற் படிந்து
தயிர்நெய் பாற்பசு மறையவர் தமக்களிந் தனரோ
லுயிர்வ தைத்திடும் பாதக மொழிந்திடுங் கணத்தில். (உ)

ஆதி யோர்பகல் வயிரவ னாகிய கடவு
ளோது மந்நகர் காவலி னுற்றுலா வருவான்
சோதி முத்தலைக் கைப்படைச் சூலமு லத்தைப்
பூத லத்தவ னூட்டிமே லெடுத்தனன் போலும். (௩)

எடுத்த பள்ளமோர் வாவியா யிலங்கிய தன்றேன்
பிடித்த சூலமங் கமைத்ததாற் பேசுமந் நாம
மடுத்த தப்பெருந் தீர்த்தமா மதனிடைத் தோய்ந்து
தொடுத்த பாவநீத் தலகிலர் தூயரா கினரால். (௪)

பாண்டு வின்மகன் பற்குனன் பரிவுட னுரவு
காண்ட வப்பெரு வனத்தினைப் புசித்திடு காலை
யாண்டி ருந்தபல் லுயிர்கள்வெந் தவிதவெம் பாவம்
பூண்ட *பாவகன் மற்றது போக்கிடக் கருதி. (௫)

---

*பாவகன்=அக்கினிதேவன், சுத்தப்படுத்துவோன் எனபது பொருள். [பூ—சுத்தப்படுத்து.]

வளர்ந்த ரும்புக ழந்தல மரீஇவை ரவன்செய்
குளந்த னிற்படிந் தப்பெருங் கொலைப்பவ மகற்றி
யுளங்கொ ளோகையி னத்தட மொளிபெறப் புதுக்கிக்
களங்கொள் கண்டனைப் பணிந்துதன் கவினுலகடைந்தான். (௬)

அனைய னேர்பெறப் புதுக்கலா லக்கினி தீர்த்த
மெனவ தற்கொரு நாமமே யெய்திய திப்பா
லினம லர்க்குலம் பொலிதரு மியமதீர்த் தத்தின்
கனமு றுந்தனி மான்மியங் கட்டுரைத் திடுவாம். (௭)

அக்கினிதீர்த்தச்சருக்க முற்றும்.

௯.

சிவமயம்.

இயமதீர்த்தச்சருக்கம்.

பாவக தீர்த்த மேல்பாற் பகழிமேழ் படுதூ ரத்தின்
மேவுறு மியம தீர்த்தம் விளம்பிய மன்றவத் தோன்
தேவதை யகோரமூர்த்தி பாதிரி திகழுந் தாரு
காவல்செய் திடுவா ரங்க னிரிரிடர் கணங்களாகும். (௧)

திருத்தரு மதனின்மூழ்கித் திலமுட னிரும்பு செம்பொன்
பருத்திகம் பளங்கார் மேதி பகடிவை பனவர் தங்கட்
கருத்தியி னுதவுவோர்கட் கறைதரு மியமன் றன்னால்
வருத்தமீ தின்றுமீண்டும் வளர்ந்திடு மவர்தம் வாணாள். (௨)

வேறு.

துன்பி ழைத்திடு குட்டநோய் பித்தநோய் சூலை
யென்பு ருக்கிடு மேகநோயாதிய விரிய
மின்பு கல்விசெல் வம்புக ழெழினனி யெய்தும்
வன்ப கைத்திறம் விளைப்பவர் வணங்குவர் வந்து. (௩)

கயலை நேர்விழி யுமைதவம் புரிந்திடு காலை
யியலு மத்தவச் சாலைதன் னூதரோ டியமன்
பயிலுங் காவல்செய் திட்டநாட் பகருமவ் வாவி
வியலுறச் சமைத் தாங்கினி திருந்தனன் மேவி. (௪)

(வேறு)

அத்தகைய நெடுந்தீர்த்தத் தென்கரையிற் சிலபகல்பின் னகன்றபின்னர்
முத்தமிழ்த்தென் மலயமுனி மருதநிழ லிடத்தொளிரு மூர்த்திதன்னைப்
பத்திவலை யிடைப்படுமெம் பரசிவனை யன்பினொடும் பணிவுற்றேத்தி
மெய்த்தவர்சூழ்ந் திலங்கிடநீ டருந்தவஞ்செய் திடுவதற்கு மேவுற்றானால்.

வினையகற்று வெண்ணீறுங் கண்மணியு முடன்முழுதும் விளங்கத் தாங்கிச், சினவியெழு மைம்புலனு முள்ளடக்கித் திரிமலமுஞ் சிதைந்து நீடு, கனமுதவு தாமரையா தனத்திருந்தா னுடலுறக்கங் கடிந்து நோக்கந், தனைமுகிழ்த்தல் விழித்தலுறா வொருதிறத்து நாசிநுனி சாரச்செய் து. (௭)

இடையினொடு பிங்கலையி னிடையினுங்கால் வரவுபோக் கிலங்கிடாது, நடுவினுறு சுழுமுனையிற் றம்பனஞ்செய் துயிர்க்குயிராய் நயந்து வைகுஞ், சுடரினைத்தன் மனத்திருத்தி வழிபடச்சில் பகலாங்குற்றோற்ற த்தோடு, முடிவுமிலாக் கடவுளெதிர் தோற்றினு னகோரமா மூர்த்தியாகி.

அலகிலுருத் தபனர்களோ ரிடத்தெழுந்த தெனத்தோன்றி டமலன் வேணி, நிலவுமிழு மிளம்பிறையு மலர்முகமும் விழிமூன்று நிகழ்செவ் வாயு, நலமருவு பிறவெழிலுங் கண்டெழுந்து மகிழ்வினொடு நடித்து முன் னர்ப், பலமுறைவந் தனஞ்செய்து கடல்குடித்த மலயமுனி பரவலுற் றான். (௮)

அணையரவ முடையோனு மரவிந்தக் கண்ணானு மறியொ ணாத துணைமலர்ச்சே வடிதனியேன் காணவெழுந் தருள்புரிந்த சோதிபோற் றி, யிணையிலிபொன் னிதழிபுனை வேணியனீ ரிடைமருதி னெந்தைபோ ற்றி, பனைமுலைமின் கொடிமருவு மிடப்பாக விடைப்பாக பரமபோ ற்றி. (௯)

என்றுதுதித் திடவன்ற னருந்தவமு மிருந்துதியு மெமதுநெஞ்சந், துன்றிமிகு மகிழ்வுறச்செய் தனவுனக்கு வேண்டுவரஞ் சொல்கவென்ன க், குன்றுதனை வளைத்தபிரா னிசைத்தனனம் முனிதாழ்ந்து குலவுநின்பா, லொன்றலுறு முயர்முத்தி வேண்டுமென வுரைத்திட்டா னுமைக்குமீசன்.

வேறு.

தென்றமிழ் முனிவமுத்தி வேண்டுமேற் றெரிக்குமன்ன
துன்றனக் கரியதன்று மயேந்திர மென்னுமோங்கல்
சென்றவ ணுறைதிநாமுஞ் சிலபகல்கழிந்திட் டந்தக்
குன்றிடை யணைந்துகாட்சி கொடுத்தனூஉந் தருதுமென்றான். (௧௧)

பெரிதுள மகிழ்வுற்றந்தப் பிறங்கல்சென் றுறைந்தானன்றோ
னரியயற் கரியவண்ண லனையபே ருருவத்தோடு
தெரியுற வின்னுமாங்கே திகழுற வுறையுநீடு
விரிதரு முலகினோர்க்கு வேண்டிய வரங்களீவான். (௧௨)

அத்தடம் படிவுற்றந்த மூர்த்தியைப் பருச்சித்தோரு
முய்த்திடு பூசையாற்றற் குரியன வுதவி னோரும்
பத்தியிற் பணிந்திட்டோரும் பாரினு மினிதுவாழ்ந்து
சித்தரா யவன்றனீழ லீடுவ ரீதுவாய்மை. (௧௩)

வேறு.

தருமனுக் கியமனித் தடத்தின் மேன்மையும்
பரசிவ னுண்டினி திலங்கு பான்மையு
மொருவகை பேசினு முமக்கு நாமினி
நிருதிதீர்த் தத்துறு நிகழ்ச்சி கூறுவாம். (௧௪)

இயமதீர்த்தச்சருக்க முற்றும்.

உ

சிவமயம்.

நிருதிதீர்த்தச்சருக்கம்.

இயமதீர்த் தத்தினுக் கிலங்கு மேற்றிசை
வயிலிரண் டோடொரு வாளி வீழிடைப்
பயிலுறு நிருதியின் றீர்த்தம் பாங்குறும்
மயலறு மாதவன் வசிட்ட னென்பவன். (௧)

நேத்திர நுதல்வளர் நிமலன் றேவதை
கூர்த்திடு நிருதியே குலவு மன்னதைக்
காத்திடு நீள்கருங் காலி யென்றிசை
சேர்த்திபெற் றிடுதரு திகழு மாயிடை. (௨)

மேயதின் மூழ்கிமேல் விளங்கு பூசினிக்
காயுனுந் தெண்ணெயுட் கலந்த போனகந்
தூயவே தியர்க்கிடிற் சுரமுன் னாகிய
நோயகன் றிடுமொரு நொடிப்ப தத்தினே, (௩)

அரக்கரி னலகையி னனுறு மின்னன்மே
னெருக்குறு வின்பமே நீடு நாடொறுந்
தருக்குறு மத்தடந் தன்னின் மூழ்கிமுன்
கருக்குநோய் தவிர்ந்துளங் களித்து ளார்பலர். (௪)

தரணியி லெளியரைக் காக்கத் தானவ
ரரசனத் தடஞ்சமைத் ததற்கு முன்னிசை
வரனுமீந் திட்டனன் மகிழ்ந்து மற்றினி
வருணதீர்த் தம்பெறு வளமை யோதுவாம். (௫)

நிருதிதீர்த்தச்சருக்க முற்றும்.

சிவமயம்

வருணதீர்த்தச்சருக்கம்.

மருத நாயகன் றனக்குமேற் றிசையினில் வாளி
யொருப தைந்துவீ ழெல்லையி னுறையுமோர் தீர்த்தம்
வருண னாக்கிய தஃதவன் பெயரினால் வயங்கு
மிருடி திண்பரத் துவாசனா மிசைதரு வருளம். (௧)

தீர்த்த பாலனைங் கரத்தினோன் றெரிக்குமெய் யுயிர்க்குஞ்
சாத்தி யப்பொரு ளாயுறு சத்தியோ சாத
மூர்த்தி தேவதை மற்றதின் மூழ்கிவெள் ளடைகா
பேர்த்து ரங்கமே லுதவிடிற் கொடுவினை யேரும். (௨)

பொன்னி ரும்பிர சதங்களிற் பொலிந்திரு விசும்பு
தன்னி டைத்திரி திரிபுரங் களினுறு தகுவர்
முன்ன வன்றரத் தாம்பெறு வரத்துறு மொய்ம்பாற்
றுன்னு வானவர்க் கனுதினந் துயரமே விளைத்தார். (௩)

வான நாடவ ரவர்செயுந் துயரினால் வருந்தி
மாநி லம்புக ழிடைமரு தெனும்பதி மருவி
மேன லம்பெறக் காகமூழ் கியதட மேவி
நானஞ் செய்துமை யருளினா ரத்தினும் படிந்து. (௪)

பொன்னி சூழிடை மருதிறை யவனடி போற்றி
யன்ன வன்மல ரடியையே யகத்தினிற் குறியாச்
சொன்ன வாருணத் தடத்தினுந் தோய்ந்ததன் கரைமேற்
பன்னு மெய்நடுக் குற்றிடப் பரிந்தன ரிருந்தார். (௫)

முந்து சத்தியோ சாதமா மூர்த்தியா யிறையோன்
வந்து நின்றெதி ரவரைநீ ரஞ்சன்மின் வலிசெ
யந்த வன்கணர்க் கழிவுநா ளடுத்ததா மென்னச்
சிந்தை தன்னொடு மெய்யுறு நடுக்கமுந் தீர்த்து. (௬)

கேச வன்றிரி புரத்துறு கேடற்பாற் கிடைத்தாண்
டீசன் மாலய னிறைவனென் றியம்பல்பொய் யென்றவ்
வாசை நீங்கிடப் பலபல மாயஞ்செய் தவர்செய்
பூசை யுஞ்சிவ பத்தியும் போக்கிமுன் வந்து. (௭)

ஈச நின்பதம் விடுத்திலர் மூவர்மற் றியாரு
நீசராயினர் திரிபுரத் திடையென நிகழ்த்த
வாசுகிப்பெரும் பணியினை நாணென மாட்டித்
தேசமிக்கபொன் மேருவைச் சிலையதாக் கோட்டி. (௮)

மாயனைக்கணை யாக்கியக் கைக்கொடு மதியோ
டேய செங்கதிர் திகிரியா யிசைமறை பரியாத்
தூய நான்முகன் வலவனாத் துன்றுமே தினியா
மேய தேரினின் றொருதனிச் சிறுநகை விளைத்து. (௯)

அந்த மென்னகை யெழுந்ததீப் பொறிகளி னங்கு
முந்து முப்புரந் தீயவு மொழியுமுத் தவரும்
வந்து தன்னடி வணங்கவுஞ் செய்தபின் வானோர்
சுந்த ரத்தம ளியநகர் துன்னவுஞ் செய்தான். (௧௦)

தாரி லங்கணி முடிச்சுரர் தனிமுதற் போற்றிப்
பாரி னிமித் தலத்திடைப் பகர்புனற் றுறைசெய்
நீரின் மூழ்கினு மிகலினோர் நெருப்புமூழ் கினவொன்
றேறி னேங்களைப் புரந்தன மிருக்கையெய் தினரால். (௧௧)

நடுக்க மின்பெறு நந்தரக் கண்ணுத லிமையோ
ரிடுக்க ணீக்கிய திறத்தினு லின்னுமத் தலத்தி
னடுக்கு தீர்த்தவ னெனச்சொலு நாமமேற் கொண்டு
வடுக்கண் மாதினோ டமர்ந்திடும் வணங்கமு லகும். (௧௨)

தருண வின்மதி மிலைந்திடை மருதுறை தலைவன்
கருணை யுற்றருள் வரம்பெறு நெஞ்சகங் களித்து
வருண னாக்கிய வாவியின் மான்மிய மிதுமே
லருண வாகனன் றீர்த்தமான் மியமினி தறைவாம். (௧௩)

வருணதீர்த்தச்சருக்க முற்றும்.

உ

சிவமயம்.

வாயுதீர்த்தச்சருக்கம்.

மேய வாருணத் தடவட மேற்றிசை யிடத்தோர்
சாய மவிழு செய்மையிற் றயங்குமோர் தீர்த்தம்
வாயு தீர்த்தமென் றதற்கிசை வாயுவே தெய்வஞ்
சேய வாதப்புரந் திடுமுநி திறங்கொள்கண் ணுவனும் (௧)

கேச ரத்தனித் தருவொன்று கெழுமலர் கொண்டு
வாசஞ் செய்திடு மாவயின் மற்றதின் மூழ்கி
யாசில் கன்னிகை கபிலைபொ னந்தணர்க் குதவிற்
பேசும் வாயுநோ யகலுமே லின்பமும் பெருகும். (உ)

ஒளிரு மத்தடந் தனிற்படிந் துயர்கதி யடைந்தோ
ரளவி லாரவர் தமிலொரு வன்றனை யறைதுங்
கிளரும் விப்பிர குலத்திலோன் கிருகலப் பெயரோன்
களவு கைதவம் படிறிவை யளவில கற்றோன். (௩)

அந்த வூர்பாற் பயிலுரு னருமறை யறையான்
மந்தி ரப்பெரு மயலினும் வடிவகிர் நெடுங்கட்
கந்த மென்மல ரோதியர் காமவே லையினுஞ்
சந்த தப்படி மனத்தொடு சரிப்பவ னொருவன். (௪)

வந்து சத்தமா முநித்தலத் திடைநளி மதியி
லிந்து வாரநா ளிரவினி லீசன்மீ திலங்குஞ்
சந்த நீள்பணி கவர்ந்திடச் சார்ந்தது தெரிவா
னந்து தீபத்தைத் தூண்டிமேற் கொண்டன னடந்தான். (௫)

நடக்கும் போதினி லியமகிங் கரர்சிலர் நண்ணி
யடுத்தி டங்கொரு பணியெயிற் றமர்தருங் கொடிய
விடத்த வன்றனைக் கொண்டுபோய் விளங்குகூற் றுவன்பால்
விடுத்து நின்றன ரன்னவ னுய்ந்திது விளம்பும். (௬)

தராத லத்திடைப் பனவநீ யிழைத்தபா தகத்தாற்
கிராத னுவுதித் தெழுமுநித் தலத்தினிற் கிடைத்தங்
கிராவி லிந்துநா ளீசன்முன் னிருந்திடு சுடர்வில்
விராவ நீட்டலா லிடைமரு தெனும்பதி மேவி. (௭)

அனில னுக்கிய வாவியிற் படிந்துமற் றனைய
புனித வாவியிற் படிந்திடு புண்ணிய வசத்தாற்
பனிம திச்சடை நுதல்விழிப் பரம்பொரு ளுலகத்
தினிதி ருஞ்சுக மெய்துவான் பிறத்திபோ வென்றான். (௮)

அவனு மத்திறற் கூற்றுவ னறைந்தவா றீண்டுச்
சவா னுவுதித் திடைமரு தெனும்பதி சார்ந்து
தவல ரும்புகழ் மருத்தெழிற் றடத்தினிற் றோய்ந்து
சிவப ரன்றனி யுலகிடைச் சென்றுவீற் றிருந்தான். (௯)

தளமி குந்திடு மலர்பொலி * சமீரண தீர்த்த
வளமை மற்றிஃ தாமினி மகிழ்வுறு தவத்தீர்
களமி டற்றவன் றுணைவனுக் கட்டுரைத் திடுதென்
னளகை மன்னவ னமைத்ததீர்த் தப்புக ழுறைவாம். (௪0)

வாயுதீர்த்தச்சருக்க முற்றும்.

உ

சிவமயம்.

குபேரதீர்த்தச் சருக்கம்.

தீர்க்க முற்றிடும் வாயுவின் றீர்த்தமென் றதற்கே
கூர்க்க டுங்கணை யைந்துசெல் சேய்மையிற் குணபாற்
றூர்க்க வின்முடி நிதிபதி சமைத்திடு தீர்த்த
மார்க்க டேயனு முனிவரன் மற்றதற் கிருடி. (௧)

கொண்ட புட்பக வூர்தியே குலவதின் றெய்வங்
கண்டை யுற்றகண் டாகர்ண னன்னதைக் காப்போன்
வண்டு ணுமலர்ச் சண்பக மதிலுறு விருக்க
மண்டு வெள்வளை யுலவுமவ் வாவியின் மூழ்கி. (௨)

வேத யாகம மாதிய வுணர்ந்தவிப் பிரர்க்கு
மோத கங்கழை சருக்கரை மொழிதரு சுகந்தங்
கோது மைக்குலங் கொடுத்திடிற் குலவுமன் னவர்க
ளோது தீவினை குறைந்திடு முயர்ந்திடுஞ் செல்வம். (௩)

அத்த டத்தினை யமைத்துவெவ் வினைதவி ரருத்த
னித்தி றப்பெருஞ் செல்வமுற் றிடவிடை மருதி
னித்த னைப்பணிந் துறுவர மேற்றனன் னீர்தோய்
மெய்த்த வர்க்குத வெனவதற் குதவினன் மேனாள். (௪)

மேவு மத்தடந் தனிற்படிந் தித்திறம் வெய்ய
பாவ நீக்கிநற் செல்வமேற் பற்றின ரநேகர்
சேவு கைத்திடு சானனுந் தேவனு ரமைத்த
வாவி யின்றனிச் சிறப்பினி வழுத்துது மன்றே.

குபேரதீர்த்தச்சருக்க முற்றும். (௫)

*சமீரணன் = வாயு. நன்றாய்ச்செல்கின்றவன் என்பது பொருள்,
[சம் = நன்றாக, ஈர் = போ, செல்.]

உ

சிவமயம்.

ஈசானதீர்த்தச்சருக்கம்.

இயக்கர் நாயக னமைத்திடவ் விலஞ்சியின் கீழ்பால்
வயக்க டுங்கணை யிரண்டிலீ சானன்முன் வகுத்த
வியக்கு றுந்தனிப் பொற்றட மேவுறு மிருடி
மயக்கின் மாதவ வசிட்டனும் வார்தரு விளவே. (௧)

மாணி பத்திர னென்பவன் மற்றதைப் புரப்போன்
றூணு வென்றல கிசைத்திடு சங்கரன் றெய்வங்
காண திற்படிந் துருத்திரக் கண்மணி கலைகள்
சேண ளித்திடின் மகவுறும் ஞானமுஞ் சேரும். (௨)

மேலை யன்னதிற் படிந்தெழில் மிருகண்டு மைந்தன்
சூல பாணியை யனையபொற் பதியிடைத் தொழுது
கால னென்பவன் றனைப்புகழ்க் கடவையில் வென்று
சால வின்புற வாழுநா ளெய்தினன் றனித்து. (௩)

உரிய வன்பினம் மறையவ னிதிற்படிந் துலகிற்
பெரிது வாழ்பக லெய்தின னென்பது பெரியோ
வரிய ஞானமொன் றெய்திடு மெனச்சொலி னதனாற்
சுரிய கந்தரன் றிருவருள் கலந்திடு மன்றே. (௪)

இன்னு மத்தடந் தனிற்படிந் திடைமரு திறையோன்
பொன்ன டித்துணை பணிந்தரு ளெய்தியிப் புடவி
தன்னி டைப்பல யுகமுறச் சித்திசார்ந் தவரு
மன்னு வீடுபெற் றவர்களும் வரையில ரன்றே. (௫)

ஈச னாற்றிய வாவியின் மான்மிய மிதுவாம்
யாசி லந்தணி ரினியவன் மலரடி வணங்கி
வாசு தேவனென் றுரைத்திடு மாதவ னமைந்த
தேசு மிக்கதீர்த் தக்கதை சிறிதெடுத் திசைப்பாம். (௬)

ஈசானதீர்த்தச்சருக்க முற்றும்.

சிவமயம்.

கிருஷ்ணகூபச்சருக்கம்.

ஆலயத்தினி லீசதிக் கதனிடைக் கண்ணன்
மேலையத்தலத் தெதிர்ந்தநாள் விளைத்ததோர் தீர்த்தங்
கோல முற்றினி திலகிடுங் கூபமீ தருவாய்ப்
பாலி னட்டமி தனிலதிற் படிதலுத் தமமால். (௧)

தரிக்கு மன்னதிற் பரிவொடு தானமுன் னியற்றிற்
றெரிக்கும் வெவ்வினைக் கணத்துட னிரணமுந் தீரும்
வரிக்கண் மாதுறும் மகவுறு மதியிள நிலவு
விரிக்கு மின்சடைத் தனிமுதல் கருணையு மேவும். (௨)

தான வர்க்கிறை யாகிய மாவலி தன்பாற்
றான மூன்றடி தருகெனத் தசையரி வேள்வித்
தான மெய்தினன் றிரந்திடப் * பார்க்கவன் றனித்துத்
தான வற்கியற் குரவனுந் தன்மையாற் சார்ந்து. (௩)

மேவு வஞ்சமீ தெனக்கொடா வகையெதிர் விலக்க
மாவ லிப்பெயர் மானவன் வந்திரந் தவர்கட்
கீவ தேபெரி தெனவுரைத் தளிப்பதற் கிசையக்
† காவி யன்பினர் மேனெறி யாதெனக் கருதி. (௪)

பொழித ரும்புனற் கமண்டலச் சிறுதுளை புகுந்துள்
வழிய டைத்தனன் வாமனன் மற்றதை யறிந்தவ்
வுழியி னோர்பசுந் தருப்பையிற் குத்திட வொளியோன்
விழியி னொன்றிடைப் பட்டது வியன்மணி சிதற. (௫)

ஆங்க வன்றய ரொடுமுகம் பெயர்த்தன னதனிற்
றூங்கு தண்புனல் விடுத்தவன் சொன்னவா றளித்தான்
வாங்கி மாயவன் றலைக்கொள மலர்ப்பதங் கொடுத்தா
னீங்கு வெள்ளியின் னேகநேத் திரத்தொடு நின்றான். (௬)

ஈதல் வேண்டும் வந்திரந்தவர்க் கிசைந்தன விலையே
லோதல் வேண்டுமற் றொருவருக் குதவுமா றின்றேல்
யாது மோதுறு திருந்திட வேண்டுமென் றீதல்
பேத முற்றிடச் செய்பவர் பிணியுறல் வியப்போ. (௭)

* பார்க்கவன் = சுக்கிரன். பிருகுவின் சந்ததியிற் பிறந்தோன்.

† காவியன் = சுக்கிரன், கவினது புத்திரன்.

கொடுக்கு மானவ னின்பமேற் கூடிடு முன்ன
ரிடுக்க ணெய்தினு மதனொடு புகழுமொன் றெய்துந்
தடுக்கி னார்க்கொரு புன்கணுஞ் சாற்றிடு வசையு (௮)
மடுக்கு மென்பதம் மாவலி கவிகள்பா லறிந்தாம்.

நின்ற வெள்ளிபொன் னிடைமரு தெனும்பதி நேர்ந்து
துன்று சீருறக் கூவனீர் தோய்ந்துடன் பெற்றான்
சென்ற கண்மணி பிறர்க்கிவ னீதலைச் சிதைத்தோ (௯)
னென்று காட்டிலைச் சினையின்முன் போலவே யிலங்கும்.

பாவு மோகையி னுமையொடு மருதுறு பாங்கின்
மேவு சோதியைத் தன்னிரு விழியினு நோக்கித்
தூவி யொண்மலர் பணிந்தெதிர் துதிபல விசைத்துத் (௧0)
தேவர் தங்களுக் கின்னல்செய் தீவினை தீர்ந்து.

தன தெழிற்றனி யுலகிடைச் சார்ந்தனன் றயங்கு
மனைய தீர்த்தமான் மியஞ்சொலற் கநேகமுண் டின்னுஞ்
சினவு மால்விடைத் தாணுவின் றிருவிழி யமைத்த (௧௧)
கனக தீர்த்தமான் மியமினிக் கட்டுரைத் திடுவாம்.

கிருஷ்ணகூபச்சருக்க முற்றும்.

உ

சிவமயம்.

கனகதீர்த்தச் சருக்கம்.

மாக வின்மதி சூடிகண் வந்தபொற் றீர்த்தங்
காக தீர்த்தமென் றுயது காகமுன் மூழ்கி
யேக நாயகன் றிருவரு ளெய்திய துரைக்கிற் (௧)
பாகு றன்னதை நோக்கிடிற் பழவினை பறியும்.

அங்கை யாலதைத் தொடின்வினை யாவையு மகலுந்
தங்கி டன்னதி லொருதுளி தலைமிசைத் தெளிப்பிற்
பொங்கு வேள்வியைந் திரட்டியா யிரப்பலன் பொருந்து (௨)
மங்கு வெம்பிணி தொலைவுறு மருவுறுஞ் செல்வம்.

துங்க முற்றிடு மதனிடைத் தோய்ந்திடு மவர்க
ளிங்கி தம்பெறக் குறித்தவை யாவையு மெய்தித்
திங்கள் சூடிய சிவனுருப் பெறுவர்மேற் றெரிக்கும் (௩)
பங்கு னிக்கண்முன் னாளிற் படிந்திடல் விசேடம்.

கொடிய தாகிய வொருகோடி குலவதி னெய்திப்
படிதல் செய்துபொன் னுருவதாய்ப் பரனுரு வாகி
நெடிய பொற்குவட் டிரசத நிலவுவெண் கயிலை
குடிபு குந்தனும் பிறர்சிலர் கொடுமைதீர்ந் ததுவும். (௪)

முன்னர் நீவிர்நன் குணர்ந்திட மொழிதலுற் றனமா
லின்னு மன்னதி லெண்ணிலர் படிந்துநீ டின்பந்
துன்னி னார்களச் செய்கையுந் தோன்றுழி யறைதும்
பின்ன ரீண்டினிக் கங்கையின் பெருமையே சிவோம். (௫)

கனகதீர்த்தச்சருக்க முற்றும்.

உ

சிவமயம்.

கங்காகூபச் சருக்கம்.

கந்தவே ளருளாற் கூபம தாகிக் கண்ணுதற் கேதிக் கிலங்குஞ்
சுந்தரத் தீர்த்த மதனிடை யிறையோ னருளினாற் றூயநீர்க் கங்கை
சந்தத முறையு மதனைநோக் கிடினுந் தடங்கையிற் பரிசனஞ் செயினு
முந்திய கோடி கொடுவினை மூழ்கு மூழ்கிடின் வினையெலா முடியும். (௧)

மருவிடு மதனின் மூழ்கியந் தணர்க்கு வளர்சிவ லிங்கநீள் சிவிகை
யிரதம் வெண்கவிகை யிரசதங் கனக மிசைந்தன வுதவின வொன்னிற்
பரவுமிவ் வுலகிற் பகைகளை யொடுக்கிப் பகருமெவ் வின்பமு மணைந்து
விரிபசுங் கதிர்வெண் பிறைகொள்செஞ் சடில விமலனொண் பதமுமே
வுறுவார். (௨)

உத்தம மாகு மனையதீர்த் தத்தி னுத்தர திக்கினி லுறையு
மத்தநா ரீசன் விபண்டக முனிவ னனவிதன் றிசையுறுங் குணபான்
முத்தலைப் படைக்கை வயிரவ னுறையு மொழிதரு நிருதிதன் றிசையின்
மெய்த்தகைப் பிரமன் காவலாய் வதியும் மேற்றிசை யிடைமருதிலங்கும்.

சாற்றதன் மருங்கு பிதிர்களுக் கொருகாற் றருப்பண மிழைத்திடி
னதைத்தொண், ணூற்றறு தினத்துங் காசியென் றினிது நுவல்பெரும்
பதிக்கணுற் றியதா, யேற்றுள மகிழ்வ ரனையரன் னதன்பா லிருந்துநூற்
றைந்தெழுத் தோதிற், பாற்றிகழ் பதிக்க ணயிரங் கோடி பரிந்திசைத்
திடுபலன் மேவும். (௪)

அத்தகைத் தீர்த்தந் தனையெடுத் தாடி யலகிலர் கொடுவினை தொலை
த்து, நித்தனீ டருளு மடைந்தன ரனைய நிகழ்ச்சியு மளவினிற் சொலு
து, மெய்த்தவத் திரிங் குறுநியாய்க் கேண்மின் விளங்கிடு கருடதீர்த் தா
திப், பத்துவண் டீர்த்தத் திடங்களுஞ் சிறப்பும் பகருவன் றெரகைப்பட
வினிது. கங்காகூபச்சருக்க முற்றும். (௫)

சிவமயம்.

கருடதீர்த்தாதிச் சருக்கம்.

இரு டருங்கள மருதநா யகன்றனக் கெதிரே
மரு டவிர்த்தினி தொருநடஞ் சேய்மையின் மன்னுந்
தெரு டருந்தனி யத்தலத் தநாதியாய்த் திகழுங்
கருட னன்னதின் மூழ்கிமேற் கருதிய தடைந்தான். (௧)

பின்னு மெண்ணிலர் மூழ்கிமுன் பெரிதுறு நோய்க
ளின்னல் யாவையு நீக்கிமே லின்பநீ டுற்று
ரன்ன வன்பெருஞ் சிறப்பினு லவன்பெய ரடைந்த
தென்ன டைந்தனன் மூழ்கிமற் றவனெனி னிசைப்பாம். (௨)

தக்க னின்றருள் புதல்விய ரெண்ணிலர் தம்முள்
மிக்க காசிபன் மணந்திடு விநதை கத்துருவாந்
தொக்க பேருறு மிருவருந் துலங்குமோ ரிடத்தி
லொக்க வுற்றிருந் துலகியல் பேசிடுங் காலை. (௩)

கனக நாட்டின னிவுளிவால் வெளிதெனக் கவின்கொள்
விநதை யோர்ந்தன ளுரைத்திட மேலது கரிய
தென வுரைந்தனள் கத்துரு விதற்கு மாறுகி
னினிதி னேவல்செய் திடுவதீண் டிளைத்தவ ரென்றார். (௪)

அந்த வஞ்சினம் புதல்வராம் பணிகளுக் கறைந்தாள்
முந்து கத்துரு பணிகளி னொன்றுபோய் முடுகிச்
சிந்தி வல்விட மன்னதைக் கரியதாச் செய்து
வந்த தன்னவள் விநதையைக் வருதிகா ணென்றாள். (௫)

சென்று பார்த்தனர் கரியதா யிருந்தது திகைத்து
நின்ற வாணுதல் விநதையை மற்றவ ணீமேற்
றுன்று மேவல்செய் திடுகெனச் சொல்லின ளிசைவுற்
றன்று தொட்டவட் கேவல்செய் தொழிலினி னமர்ந்தாள். (௬)

அறவு மெய்யினைத் திட்டதை யனையள்கா தலனும்
பறவை நாயக னென்னென வினவினன் பணிசெய்
குறையி லென்றதன் வகையெலாங் கூறினள் குறுகிச்
சிறிய தாயினைக் கருடனென் பவனிது தெரிக்கும். (௭)

முன்னு தித்தவ ளேவல்செய் திடுவது முறையன்
றென்ன வோதின னவளிது பணிகளுக் கிசைத்தாள்
பன்ன கங்கள்வா னமிர்தமக் குதவிடிற் பரிவி
னன்னை யேவல்செய் வினையினை விடுகென வறைந்த. (௮)

ஒல்லு மவ்வுரை கருடனுக் கன்னவ னுரைக்க
நல்ல தென்றவ னிசைந்துவந் தகத்திற னோடிச்
செல்வ மோங்கிய விடைமரு தெனும்பதி சேர்ந்து
சொல்வி டத்தனிச் சிறப்புறு வாவியிற் றோய்ந்து. (௯)

பணைமு லைக்கொடிப் பாகனை வலங்கொடு பணிந்து
தணிவி லன்பொடு துதித்துவா னுலகினைச் சார்ந்து
துணிவொ டியாவரு மணுகுறு வகையெதிர் சுழலுந்
திணிய சக்கரத் தகப்படா தணுவெனச் சென்று. (௧௦)

உண்ணு ழைந்துமொல் லெனவவ னுறைந்திடு மமிர்த
வண்ண வொண்மணிக் குடந்தனைக் கைக்கொடு வருங்கால்
விண்ணு ளாரறிந் தெதிருற வெஞ்சமர் விளைக்க
வெண்ணு மன்னவர் தம்மைவென் கண்டன னேக. (௧௧)

துன்னி மற்றவர் சூழ்ந்தபின் றுதித்திட முன்னர்ப்
பன்ன கங்களுக் கிசைத்தசொற் பழுதுறா துதவி
யன்னை யேவலை மாற்றுவ னுங்குநீ ரடைவுற்
றின்ன தைக்கொடு சென்மினென் றிசைத்தவ னெய்தி.

ஓத ராவினங் கட்குமக் கமுதுகொண் டுற்றேன்'
சீத நீர்படீஇத் தொடுகெனத் தெரித்தொரு தருப்பை
மீது வைத்தனை யேவலை மீட்டனன் சென்று
றோத ரத்தலை மூழ்குமுன் சுரர்கள்கொண் டகன்றார். (௧௩)

வந்து பார்த்தன திகைத்தன மணிக்குட மிருந்த
நந்த லில்லதோர் தருப்பையை நக்கின விருப்பான்
முந்து நாவிரு பிளவுறப் பிளந்தன முழுதுஞ்
சிந்தை நொந்தன சென்றன சீறுமப் பணிகள். (௧௪)

பொருந்து மித்திறமுநி விர்காள் பூருவ முமக்குந்
தெரிந்த தேயமிர் தெடுத்தவன் வந்திடு திறனும்
வருந்து தாயினை மீட்டதூஉ மருவுறு மனைய
பரந்த வாவியிற் படிந்திடு பயனென லாகும். (௧௫)

இசைக்குந் தென்றிசைக் கோணுறு தீர்த்தத்தி னீச
திசைக் கணுவிரு வசுக்களின் றீர்த்தமொன் றினிது

வசிக்கு மற்றதின் வளர்பிறை யட்டமி மருவி
யசைக்கு மன்பொடு படிந்தவர் வேண்டிய தடைவார். (௧௬)

விரவுறும் வசுதீர்த்தத்தின் விளம்பு முத்த ரத்தி
னிரவி தீர்த்த மொன்றிலங்கிடு மிதனின் மற்றதனையோன்
பரவு வார நாளவனெழு காலையிற் படியின்
மருவு தீப்பிணி யாவையு மாய்ந்திடு மன்றே. (௧௭)

மன்னு மாதவன் றடத்தயன் மருத்து கடீர்த்த
மன்ன தோங்கிடு வாதநோ யகற்றிடு மதனின்
முன்ன ரம்மருத் துக்கள்போய் மூழ்கினீள் கருவிற்
பொன்னி லந்திறை குறையுடல் பூரண முற்றார். (௧௮)

வட்ட வாருண வாவியின் றென்புடை வயங்குஞ்
சிட்டர் போற்றிடு நரசிங்க தீர்த்தமொன் றதனைத்
தொட்டு வந்துடன் குட்டநோய் தொலைத்தன ரநேகர்
கட்டு ளைப்பதென் மூழ்கினோர் கலந்த பேரின்பம். (௧௯)

அந்த வாருண வாவியின் குணதிசை யமர்ந்து
நந்தி தீர்த்தம் வந்தாடினோர்க் களித்திடு ஞானஞ்
சந்த நீடதின் குடக்கினிற் றுரோணன் செய்தடாகம்
முந்த வன்றனக் கீந்தது மொழிந்திடு மதலை. (௨௦)

இராவ ணன்றன் மீதேகு நாளிராகவக் குரிசில்
விராவு மன்புட னுமையவள் மேவுசந் நிதிக்கட்
டரா தலம் பணிந்தேத்திடச் சமைத்ததோர் கூபம்
பராவு தன்வயிற் படிந்தவர் பகைமை தீர்த்திலங்கும். (௨௧)

வருண தீர்த்த வுத்தரந்தனில் வாளிமூ வாறில்
வரமுறுஞ் சுரதீர்த்த மொன் றிலங்கிடு மருதப்
பரமன் றென்புடை யுலகெலாம் பகர்முனி தீர்த்தம்
விரவு மொன்றிவை யிரண்டுமேல் விமலன் முன்றுதவும். (௨௨)

கூறிடும் முரகாரி தீர்த்தாதி யாக் குலவு
மாறு நாலும்வெம் பவத்தொடு துயரமு மகற்றும்
மாறில் செல்வமீண் டுதவிடு மன்னியா டினர்கட்
கீறில் சிறுகச் சபதீர்த்த மேலிசைப் பாம். (௨௩)

கருடதீர்த்தாதிச்சருக்க முற்றும்.

சிவமயம்.

கச்சபதீர்த்தச் சருக்கம்.

விலையிலா மணிக்குல முறுசைய மால் வெற்பின்
மலைய மாதவன் கமண்டல வயிற்றினின் றெழிற்கு
வலைய மேற்குண திசைக்கொடு மகரநீ லெவு
மலையி னுற்ற பொன்னியிற் சிலதீர்த்த மூண்டாங்கு. (க)

சந்த முற்றிடக் காவிரி வாரணந் தாங்கிச்
சுந்தரந் திகழ ரம்பைகள் சூழ்வுறப் புலவோர்
வந்திறைஞ்ச வச்சிர மெடுத்தே கலின் வானாட்
டிந்திரன் றனக்கிணை யெனப்புவி யிடையி லங்கும். (உ)

பெருமை மேவித்தென் கீழ்த்திசை யடைந்து மேற்பிறங்கல்
விரவு சோதி கண்ணுற்றொரு பூதமாய் வெந்தீப்
பொருவுந் தன்னிடத் தடைந்துளோர் கொடுவினை போக்கி
யுரமுறும் பகரேர்ந்தி கலியமனை யுறழும். (ங)

பொருவில் காருருக்கொடு நிசியலை யுறப் போந்து
நிருதியாகி மீனிவந்து வாருண முறநிலவி
மருவுபாசி யென்றிடல் கொடு வருணனாய் மண்மே
லருண மூர்ந்துயிர்க் குயிரதாய னிலமா யோங்கும். (ச)

ஈசன்றன் பதிமருங்கி னுற்றுயர் தன மெய்திப்
பேசலுற்றிடு மளகையோன் புரைதரும் பெரிது
வாச நீடறு கணிந்து காமதகன நிரப்பித்
தேசின் மிக்கவீ சானனிற் சிறந்திடு மன்றே. (ரு)

துன்னினார் தமக்க சோகத்தோ டஞ்சுகந் தோன்ற
மன்னிவேங்கை நீடிபங்கொடு குறிஞ்சியாய் வழிக்கோள்
பன்னிடும் பொருள் பறித்து மேல்விடலையும் பறித்துக்
கன்னியுந் தரித்தோதிடு பாலையைக் கடுக்கும். (சா)

மால டைந்துசிற் றிடைச்சியர் பயின்றுமான் மருவிக்
கோல முற்றிடு கலுழியும் பூவையுங் கூடி
யேலு முல்லைதா மனைவயல் வஞ்சிநீ டிலஞ்சி
பாலி சைந்தருச் சுனமுறு மருதமாப் படரும். (எ)

கடல ணைந்துழுத் தரும்பிடு கடிமலர்ப் புன்னை
மடல் விரித்தெழு கேதகை பட்டின மருவித்
தடமி சைந்திடு நெய்தலாய்த் தயங்கிடு மினைய
புடவி மீதுளோர்க் கமுதமாய் விளங்குமப் பொன்னி. (௮)

கலை யறிந்தன மேற்கொடு கலைமக ளாகி
மல ரணைந்துவண் டிகிரிசங் கேந்திமே லவன்முற்
றில கெழிற்றிரு வாகிவெற் பிடத்தினிற் றோன்றி
யல கினீடறம் விளக்கலி னம்பிகை நிகர்க்கும். (௯)

புனையு மண்மணை வியாலையும் புகல்பர னுருவாய்த்
தனையொத் தோங்கிடு காவிரி நதிதற்றவழ் காற்றுங்
கெனையர் மேற்படிந் திடினும்பட் டேகிடுங் காலை
யனையர் வெம்பவ மனைத்து மேற்றகன் றிடு மன்றே. (௰)

போற்று காவிரி பொருந்துகால் பொருந்திவெம் பவங்கள்
மாற்று மேலதை நோக்கினோர் மலர்க்கைதின் டினர்க
டோற்ற திற்படிந் துளோர்பவந் தொலைவுறு மென்னச்
சாற்ற வேண்டுமே யெவர் தரிசனத்தினுஞ் செலுமால். (௧௧)

பன்னு கங்கையின் மூன்றுநாட் படிந்திட யமுனை
தன்னி லேந்துநாட் டோய்ந்திடத் தவர்ந்திடும் பாவ
முன்னு காவிரி யொருதின மூழ்கிடி லகற்றும்
பின்னு மவ்வுட லளவுசெய் பிறங்குவெம் பவமும். (௧௨)

வன்ப கைப்பிணி தவிர்த்திடு மருவுமெய்ஞ் ஞான
மின்ப மெய்திடுந் நிலத்துட னப்புன லேற்றுத்
தென்பு லத்தவர்க் குதவிடிற் றிகழவர் மரபிற்
றுன்ப மார்நிரை யத்துளோ ரடைகுவர் சுவர்க்கம். (௧௩)

இயல்கொள் சையமா தியவிட மெவற்றினு மிசைத்த
பயனு றத்தரு மவற்றினிற் பகருமா னைக்கா
மய லகற்றுமை யாறுதென் குடந்தையொன் மருதூர்
வியலு றும்புகழ் மயிலையா தியதலம் விசேடம். (௧௪)

கூறி டுந்தலா மதியினிற் கூடிநீ டறுபத்
தாறு கோடிதீர்த் தங்களும் பொன்னியி னமரும்
மாறி லம்மதி யன்னதின் மருவியா டினர்க
டேற வற்றெலாஞ் சென்று தோய்பயனதா உஞ் சேர்வர். (௧௫)

கந்த மார்தொடைக் கவேரன்றன் கன்னிகை யாகிச்
சிந்து மன்னவன் றனக்கொரு துணைவியாய்த் தெரிக்கு
மிந்த வையகத் துயிர்களுக் கன்னையா யிலங்கு
மந்த மாநதி மான்மிய மநேகமுண் டின்னும். (கசு)

மேவு மந்நதி தனில்வட புறந்தனில் விளங்குந்
தாவில் கச்சப தீர்த்தமாந் தனித்துறை யதற்கு
மாவி லங்கிடு தருமுநி மருவுகச் சபனே
காவ லன்புகழ் வீரபத் திரனெனுங் கடவுள். (கஎ)

வாம தேவனங் கதற்கிசை தேவதை வயங்கக்
காமர் வண்டுறை மூழ்கியெட் கலந்தபோ னசநற்
றும முற்றிடு சிவிகை தானியந்தரு தகையோர்
பூமி காவல்செய் திடுவர்மேற் கொடுவினை போக்கி. (கஅ)

அவமில் சீருறு கச்சப னத்துறை மருங்குத்
தவமி யற்றினன் சிலபகல் பிறைமதிச் சடையோ
னுவமை யில்லதோர் வாமதே வத்தனி யுருவோ
டவ னுதித்தன னெரிடத் தலகிலா தவரின். (கக)

ஆன்ற மாதவன் பணிந்தெழுந் தேத்திடு னமல
னென்ற நீபெறு வரங்களென் னென்றன னனையோன்
வான் றயங்குனை யநுதினம் வணங்கநா னிறைவ
தோன்று மிவ்விடங் கொண்டுறைந் தருள்கெனச் சொன்னான்.

தாது லாமலர்க் கூந்தன்மால் வரைக்கொடி தன்னோ
டாதி நாயக னத்திற னுண்டினி துறைந்தான்
மாத வத்தனு மனமகிழ்ந் துறைந்தனன் வைகு
மேது கொண்டவன் பெரியனு லத்துறை யிலங்கும். (உo)

பேசு மத்துறை படிந்தவன் பெரிதுகந் துறையு
மீச னைப்பணிந் தளவில ரின்பமீ டுற்றார்
மாசின் மாதவக் கவுதம முனிவரன் மகிழ்ந்து
வாச முற்றிடு தடந்துறை வளமினிப் புகல்வாம். (உஉ)

கச்சபதீர்த்தச்சருக்க முற்றும்.